# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 13<br>இதழ்: 5 | பிலவஹு ஆவணிமீ<br>ஆகஸ்ட்—செப்டம்பர் '61 | வருட<br>சந்தா<br>ரூ. 3-00 |




இறைவன் திருமுன் பரவை சுந்தரர்

சந்திப்பு

பக்கம் 196

## உள்பொருள்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | எங்கும் ஆறுமுகமே (திருப்புகழ்மணி) ... | 193 |
| 2. | திருமணமும் திருத்தொண்டத்தொகை உதயமும் (கி. வா. ஜகந்நாதன்) ... | 196 |
| 3. | திருவண்ணாமலை திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... | 200 |
| 4. | உபநிஷதங்களின் உள்ளொளி (ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி) ... | 209 |
| 5. | குமாரஸ்தவ விரிவுரை - 3 (திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A.,B.T.) ... | 217 |
| 6. | கருதா மறவா நெறி (கி. வா. ஜ.) ... | 220 |
| 7. | நிதி மன்னர் நிலை (ரஸபதி) ... | 223 |
| 8. | "கடவுள்" சச்சிதாநந்தன் (இலங்கையடிக் கௌணிய வித்வான் இராஜசிவ சாம்பசிவ சர்மா). ... | 233 |
| 9. | UNIVERSAL BANKER (*Thiruppugal Mani*) ... | 238 |


### அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரையீ முதல் பங்குனியீ முடிய வருடச் சந்தா உள்நாட்டிற்கு ரூ. 3. பணம் முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 14.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா முப்பது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினால் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினால், சித்திரையீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து, சந்தாத் தொகையைப் பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

**அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.**

**குறிப்பு :** முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3-50 விதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1.

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

எல்லோரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே.

ஆசிரியர் : முத்துஸ்வாமி

| | | |
|---|---|---|
| மலர் 13 | பிலவ ஞு ஆவணி ௴ ஆகஸ்ட்-செப்டம்பர்—1961 | இதழ் 5 |

## எங்கும் ஆறுமுகமே

(திருப்புகழ் மணி)

வள்ளியாகிய ஜீவன் இதயமாகிய பரணில் இருந்து கொண்டு "சரவணபவனே" என்று கதறுகிறாளாம். நாரத பகவான் வந்தார். வள்ளியின் நிலையைக் கண்டார். அவள் நிலையை முருகனுக்குக் கூறி அவன் வள்ளியை வந்தாட் கொள்ளும்படிச் செய்கிறார். சப்த ப்ரம்மமே நாரதர். ஆண்டவன் நாமத்தைச் சொல்லிக் கதறும் பொழுது, அந்த நாமத்தின் ஒலியே ஆண்டவனுடன் நம்மைச் சேர்த்து வைக்கிறது.

நமக்கு அனுக்ரகம் செய்ய வந்த அற்புத தெய்வ சுவரூபமே ஆறுமுக வடிவம். 'ஆறு' என்றால் வழி. நாராயணன் ஜலரூபமானவன். அவன் எங்கும் நிறைந்திருக்கிறான். அவன் ப்ருமத்தை யடையும் வழிகாட்டியா யிருக்கிறான். அந்தவழி அல்லது ஆற்றில் பச்சைப் புயல் மெச்சத்தகு பொருளாகிய முருகன் அடியார்கள் தன்னைக் காண்பதற்கு ஞான மயமான

---

கனியை மரத்தடியிற் கண்டெடுத்தாற் போல,
மனிதர் சிலர்க்கு வருவாயீ வருவதுண்டே.

ஆறுமுக உருவெடுத்தான். ஐம்பொறிகளும் அடங்கித் தண்ணென்று தணிந்தோர் சித்தத்தி லிருக்கிருன் முருகன். எலும்பெனும் கட்டையால் கட்டப்பட்டது உடம்பு. இதில் இதயமெனும் பரணிருக்கிறது. அதில் முருகனிடம் காதல் கொண்ட ஜீவனுகிய வள்ளி புண்ணியத்தினுல் வளர்ந்துவரும் பக்தியாகிய தினேக்கதிர்களை ஆசாபாசங்களாகிய கிளிகள் கொத்தாதபடி காத்துக் கொண்டிருக்கிருளாம். எப்படி? ஓம்காரமாகிய கவணில் முருகா வென்ற மாணிக்கக் கல்லே வைத்து ஆசாபாசமெனும் பறவைகளினமேல் எறிகிருள். அவைகள் அஞ்சியோடுகின்றனவாம்.

அவள் கிராத குலத்தில் பிறநதவள். ஐம்புலன்களே கிராதகர்கள். அவற்றினிடம் அகப்பட்டுக் கொண்டது மானிட மனம். மனம் பெண்ணினத்தைச் சேர்ந்தது. பெண்களுக்குச் சபலம் அதிகம். முருகன் ஒருவனே புருஷன. மனமாகிய வள்ளி பரமபுருஷனுகிய முருகனேத் தேடுகிருள். அவன் வடிவும், அழகும் இளமையு முடையவனுய் வள்ளியின் முன் தோனறி னிருன. ஆண்டவனுடைய மூச்சில தான உலகமெல்லாம் கட்டப் பட்டிருக்கிறது. மனிதன் தன மூச்சினுல் அவனேக் கட்ட வேணடும். மனிதன உண்மையில் கெட்டவனில்லே. மனத்தினுடைய ஏமாற்றத்தினுலதான் கெட்டவனுகிருன். ஆதலால், கெட்ட நடததை யுள்ளவரென்று ஒருவரையும் தள்ள முடியாது. கெட்ட நடத்தை யுடையவர்களே, ஆண்டவனருளே வேண்டி மனம் மாறி மகான்களாய் விடுவர். எல்லாம் இறைவனுடைய சிருஷ்டியா யிருக்கையில் மொட்டு மலராதென்று எவ்வாறு சொல்ல முடியும்? மொட்டு நெகிழ்ந்து மலர்நது தேன பெருககுவது நிசசயம். உலகில் மனிதர்களுக்கு அறிவு முதிர்நது வரும் சமயத்தில், மனத்துக்

---

கல்விவழி மெய்ம்மைநிலை கண்டவர்கள் போல்,சில்லோர்
பல்லிளிததுப் பேசல், பகட்டாகும் அவ்வளவே.

கும், ஆண்டவனுக்கும் நடக்கும் சம்வாதமே, வள்ளிக்கும் முருக னுக்கும் நடந்த சம்வாதம். முகத்துக்கு முகமாயுள்ள முருகனைக் காணாத வள்ளிக்கு மனத்தில் ஷண்முக தரிசனம் ஆயிற்று. தாக்ஷாயணி தன் சரீரத்தை அக்னியில் விட்டு சிவனை யடைந் தாள். வள்ளி சோர்ந்து கீழே விழுநதாள. எதிரில் நின்ற ஷண்முகனைப பார்த்தாள். தேடொணாத் தேவனை முருகா! முருகா வென்று தன்னுள்ளே தேடிக்கண்டு கொண்டாள். பிறகு பார்த்த இடமெல்லாம் முருகனுயிருக்கக் கண்டாள். யார் முகத்திலும் ஆறுமுகத்தைப் பார்த்தாள. சிவனைச் சண்முக னும், சண்முகனை இருவரும் துதித்தனராம். இருவரும் ஒருவரே. சிவமே சிவஷண்முகம். ஆசாபாச காம குரோதங்களில அகப் பட்டுத தவிக்கையில்தான் பிறரைக் காண முடியும். ஆசா பாசஙகள் ஆண்டவனருள் வெள்ளத்தில கரைந்தால், அவனை யனறி பிறரைக் காண முடியாது. 'நினைவார் பிறரன்றி நீயே யானாய்' என்றார் அப்பர்.

இருட்டில்தான் ஜோதி நன்றாய்த் தெரியும் "திருவையாற கலாத செம்பொற் சோதீ" என்றார். ஐயாறென்பது ஐம்புலன் களின் வழியாயும் தன் ஆசையைச் செலுத்தும் மனத்திற் கிருப்பிடமான உடம்புதான். அந்த மனத்தை ஆண்டவனிடத் தில் திருபபிவிட்டார் அப்பர். ஐயாறு திருவையாறு ஆயிற்று.

பிறகு உடம்புகளெலலாம் திருவையாறாகவும், உயிர்க ளெலலாம் சிவமாகவும் காணப்பட்டனவாம்.

[தொடரும்]

---

இலைவெட்டும் கத்தி மயிர்வெட்டா வண்ணம்,
வலியிலாரைப் பகைக்கும் வனமையரும் உள்ளனரே.

# திருமணமும் தொண்டத்தொகை உதயமும்

(கி. வா. ஜகந்நாதன்)

"திருவாரூருக்கு வருக" என்ற ஒலியைக் கேட்டு இறைவனை இறைஞ்சித் தில்லையைவிட்டுப் புறப்பட்டார் சுந்தரர். தென்றிசை வாயில் வழியே புறம்போந்து கொள்ளிட நதியைக் கடந்து சீகாழியை அணுகினர். அது திருஞான சம்பந்தப் பெருமான் திருவவதாரம் செய்த தலமாதலின், அதனுள்ளே மிதிக்கக் கூடாது என்று புறத்தே நின்று வணங்கினர். அப்போது பிரமபுரீசர் அவருக்குக் காட்சி கொடுத்தருளினர். அங்கே திருப்பதிகம் பாடித் திருக்கோலக்கா, திருப்புன்கூர், மயிலாடுதுறை, அம்பர் மாகாளம், திருப்புகலூர் முதலிய தலங்களை யெல்லாம் தரிசித்துக் கொண்டு திருவாரூரை அடைந்தார்.

"நாம் அழைக்க நம்பி ஆரூரன இங்கே வருகின்றான். அவனை எதிர்கொள்வீர்களாக" என்று திருவாரூரி லுள்ளாருக்கு எம்பெருமான் கனவில் அறிவித்தருள, "சிவபெருமானுடைய அருள்பெற்ற ஆரூரர் நமக்குத் தலைவர்" என்ற அன்பு மீதூர, அவரை வரவேற்பதற்கு ஏற்ற வகையில் அவர்கள் நகரை அலங்கரிக்கலானார்கள். மாளிகைகளிலும் மண்டபங்களிலும் பெருங் கொடிகளை நாட்டினார்கள். தோரணங்களைக் கட்டினார்கள். கமுகும் வாழையும் நட்டார்கள். நிறை குடமும் விளக்குகளும் வைத்தார்கள். திண்ணைகளை மெழுகிச் சுண்ணமும் முத்தும் பரப்பிக் கோலம் இழைத்து மாலைகளை வரிசை வரிசையாகத் தொங்க விட்டார்கள். அங்கங்கே பந்தர்களை அமைத்தார்கள். வீதிகளில் பனிநீர் தெளித்தார்கள்.

---

பலர்முன் மேலோரைப் பாழ்கூறும் பாவம்,
பலர்முன் அவமானம் பண்ணிவிடும் நிசசயமே

மங்கலக் கருவிகள் முழங்கப் பாடல்கள் ஒலிக்க அணங்கினர் நடம்பயில எங்கும் ஒரே மகிழ்ச்சி ஆரவாரம் மிக்கது. அடியார்கள் குழுமித் திரண்டு நகரத்தின் வாயிலில் நாவலூரரை எதிர் நோக்கி நின்றிருந்தார்கள்.

சுந்தரமூர்த்தி நாயனுர் வந்தவுடன் அவரை யாவரும் வணங்க, அவர் அஞ்சலி கூப்பித் திருவீதியூடே செல்லலானுர். போகும்போது, "எந்தை இருப்பதும் ஆரூர் அவர் எம்மையும் ஆள்வரோ கேளீர்" எனவரும் திருப்பதிகத்தைப் பாடினுர். திருக்கோயில் சென்று திருவாயிலில் வணங்கிப் புகுந்து புற்றிடங் கொண்ட பெருமான் சந்நிதியிலே சென்று வழிபட்டார். அவருடைய உள்ளம் இன்பத்தால் நிறைந்து பொங்கியது. திருப்பதிகம் பாடினுர். அப்போது வானில் ஒரொலி எழுந்தது. "நாம் உனக்குத் தோழரானேம். நீ நாம் தடுத்தாட் கொண்டபோது கொண்டிருந்த திருமணக் கோலத்தைப் புனைந்து எப்போதும் மகிழ்ச்சியோடு இருப்பாயாக" என்று இறைவன் அருளிச் செய்தான். அதனைக் கேட்ட வன்ருெண்டர், "எம்பெருமானே! உன் கருணை இருந்தவாறு என்னே!" என்று உருகிப் பலமுறை வணங்கிப் பின்பு வீதிவிடங்கராகிய தியாகராசர் சந்நிதி சென்று வணங்கினுர். அதுமுதல் திருவாரூரே பதியாக வாழலானுர். அவருக்குத் தம்பிரான் தோழர் என்ற புதிய பெயரும் அமைந்தது.

இந்தத் திருவவதாரத்துக்கு முன்புள்ள மூல மூர்த்திக்குரிய திருநாமம் ஆலால சுந்தரர்; அதனைக் கருதியே சுந்தரர், சுந்தரமூர்த்தி என்று அப்பெருமானை வழங்கினர். தாய் தந்தையர் வைத்த பிள்ளைத் திருநாமம் ஆரூரர் என்பது. திருநாவலூரில் பிறந்தமையால் நாவல ஆரூரர் என்றும், நாவலர் கோமான் என்றும், ஆதிசைவராதலின் நம்பியாரூரர் என்றும் பெயர் பெற்ற இவர், தம்மை ஊரன் என்றும்

---

குறைகுடம் கூத்தாடும் என்பதுபோல், கூர்மை நிறையிலார், தற்புகழ்ச்சி நீட்டிக்கப் பேசுவரே,

சொல்லிக் கொள்வார். இறைவன் அளித்த வன்றொண்டர், தம்பிரான் தோழர் என்ற திருநாமங்களும் இவருக்கு அமைந்தன.

நாள்தோறும் சுந்தர மூர்த்தியார் திருக்கோயில் சென்று புற்றிடங் கொண்டாரை வழிபட்டு அவ்வப்போது தமிழ் மாலைகள் சாத்தி வந்தார்.

திருக்கயிலாயத்தில் இருந்த கமலினி என்னும் அணங்கு, திருவாரூரிற் பதியிலாராகிய உருத்திர கணிகையர் குலத்தில் பிறந்து பரவையார் என்னும் நாமம் பெற்று வளர்ந்து வந்தார். எம்பெருமானுடைய திருககோயில் தொண்டு செய்துகொண்டு சிவபக்தியிற் சிறந்து விளங்கினர்.

ஒருநாள் சுந்தரர் அப்பெருமாட்டியைத் திருக்கோயிலிற் கண்டார். அவருடைய அழகு நாயனருடைய உள்ளத்தை ஈர்த்தது இறைவனிடம் ஈடுபட்ட தம் உள்ளத்தை இழுக்கும் அம்மட மங்கையார் இறைவன திருவருளால்தான முற்பட்டார் என்று அவர் நினைத்தார். அபபடியே யாரையும் ஏறிட்டுப பாராத பண்புடைய பரவையாரும் சுந்தரரைக் கண்டு அவர் மேல மனம் போக்கினர்.

இதனை உணர்ந்த சிவபெருமான் திருவாரூரில் உள்ள அடியவர்களது கனவில் தோன்றி, "சுந்தரனுக்கும் பரவைக்கும் திருமணம் செய்து வையுங்கள்" என்று அருளினன். அவர்கள அவ்வாறே மிகச் சிறப்பாகத திருமணத்தை நடததி வைத்தாரகள்.

அதுமுதல் சுந்தரர் தம் வாழ்க்கைத் துணையாகிய பரவையாருடன் ஒனறி, அறமும் அடியார் வழிபாடும் சிவநெறி படரும் யோகமும் இணைநது நடததுவாராயினர்.

ஒருநாள் திருக்கோயிலுக்குள்ளே புகுந்தார். திருத்தொண்டர்கள் குழுமியிருக்கும் தேவாசிரியன எனனும் மண்டபத்தைக்

---

அறிஞர் அடக்கம அமைதிநிலை, மற்றோர்
தறிபோல இருநதாலும், தன்செருக்கு உண்மையிதே.

கடந்து செல்லும்போது, "இந்தப் பெரியவர்களுக்கு அடிய ஞரும் பேறு எப்போது கிடைக்குமோ!" என்ற எண்ணம் உதயமாயிற்று. இறைவன திருமுன் சென்று வணங்கினார். அப்போது இறைவன் அடியார்களுடைய நிலைகளை அவர் உணரும்படி அருளினான். பின்பு, "நீ தொண்டர்களைப் பாடு வாயாக" என்று பணித்தான். அபபோது தம்பிரான் தோழர், "எம் பெருமானே, இன்னவாறு பாடவேண்டு மென்னும் நெறியறியாத எளியேனுக்குப பாடும் பரிசை அருளவேண் டும்" என்று வேண்ட, இறைவன், "தில்லைவா ழந்தணர்தம் அடியார்க்கும் அடியேன" என்று திருபபதிகத்தின் முதலை எடுதது்க் கொடுததருளினான். அதுகேட்டு மகிழ்ந்து இறை வனை வணங்கித் தேவாசிரியனை அடைந்து, அங்குள்ள தொண் டர்களைத் தூரததிருந்து தொழுது, அருகு சென்று எம் பெருமான எடுததுக் கொடுத்ததை முதலாக வைத்துத் திருத் தொண்டத் தொகை எனனும் திருபபதிகத்தை அருளினார். அதைப் பாடி மீட்டும் அடியார்களை வணஙகினார்.

அபபோது அவர் பாடிய திருத்தொண்டத் தொகையே பின்பு சேக்கிழார் பெரிய புராணம் பாடுவதற்கு வித்தாக அமைந்தது. இதனைச் சேக்கிழார் பெரிய புராணத்தில் சொலகிறார்.

உம்பர்நா யகரடியார் பேருவகை தாம்எய்த
நம்பியா ரூரர்திருக் கூட்டத்தின் நடுவணைந்தார்;
தம்பிரான் தோழரவர் தாம்மொழிந்த தமிழ்முறையே
எம்பிரான் தமர்கள்திருத் தொண்டேத்த லுறுகின்றேன்.

---

முயன்று பொருளீட்டி மூதறிஞர் வாழ
நயமையினார் அன்னார் பெருருள்கவர் எண்ணுவரே.

## திருவண்ணாமலை
## திருப்புகழ் விரிவுரை
[ குகஸ்ரீ ]

தமர குரங்களுங் காரி குட்டி ழும்பு
மெழுகிய அங்கமும் பார்வை யிற்கொ ளுந்து
தழலுமிழ் கண்களுங் காள மொத்த கொம்பு முளகதக்
[கடமாமேல்

தனிவரு மந்தகன் பாசம் விட்டெ றிந்து
அடவரு மென்றுசிந் தாகு லத்தி ருந்து
தமரழு மைந்தருஞ் சோக முற்றி ரங்க மரணபக் குவமாதல்

கமல முகங்களுங் கோம ளத்தி லங்கு
நகையு நெடுங்கணுங் காதி னிற்று லங்கு
கனக குதம்பையுந் தோடும் வஜ்ர அங்க தமுமடற்
[சுடர்வேலும்

கடிதுல கெங்கணுந் தாடி யிட்டு வந்த
மயிலுமி லங்கலங் கார பொற்ச தங்கை
கழலொலி தண்டையங் காலு மொக்க வந்து வரமெனக்
[கருள்கூர்வாய்

இமகிரி வந்தபொன் பாவை பச்சை வஞ்சி
அகில தலைபெறும் பூவை சத்தி யம்பை
இளமுலை யின்செழும் பால்கு டித்தி லங்கு மியல்நிமிர்த்
[திடுவோனே!

இறைவ னிறைஞ்சநின் குக மப்ர சங்க
முரைசெய் திடும்ப்ரசண் டாவி சித்து நின்ற
ரணமுக துங்கவெஞ் சூரு டற்பிளந்த அயிலுடைக் கதிர்வேலா!

---

கீழோர்தம் கேண்மைநிலை கேடுதரும்; பாவமாம்;
வாழறிஞர் நட்பு, வளமளிக்கும் வாய்மையிதே.

அமண ரடங்கலுங் கூட லிற்றி ரண்டு
கழுவி லுதைந்துதைந் தேற விட்டு நின்ற
அபிநவ துங்ககங் காந திக்கு மைந்த அடியவர்க்
[கெளியோனே !
அமரர் வணங்குகந் தாகு றத்தி கொங்கை
தனில்முழு குங்கடம் பாமி குத்த செஞ்சொ
லருணை நெடுந்தடங் கோபு ரத்த மர்ந்த அறுமுகப்
[பெருமாளே !

(பதவுரை) இமகிரி .....நிமிர்த்திடுவோனே !)

இம கிரி வந்த பொன் பாவை - (உயர்ந்த) இமய மலையில் உதயமான (பசும்) பொன் பதுமை போன்றவரும் ;

பச்சை வஞ்சி - (துவளும்) பசுங்கொடிபோல் தோன்றுப வரும்;

அகில தலம் பெறும் பூவை - அண்டங்கள் அனைத்தையும் அளிதத (உத்தம) மைனவை ஒத்தவருமான ;

சத்தி அம்பை - ஆற்றல் மயமான அம்பிகையின் ;

இள முலையின செழும் பால் குடிதது - இளமைக் குயங களில் (இருந்து சுரக்கும்) பரம சிவஞான அமுதம் பருகி ;

இலங்கும் இயல் நிமிர்ததிடுவோனே - விளங்கும் இயற் கையின் விளக்கம், (தாழாதபடி) தலைநிமிரச செய்தவனே!

(இறைவா இறைஞ்ச.........கதிர்வேலா !)

இறைவர் இறைஞ்ச நின்று - சிவனர் வணங்கிச் சிர வணிக்க, (இனப அவா திருமுன்) இருநது ;

ஆகம ப்ரசங்கம் உரை செயதிடும் பிரசண்டா - (உயர்ந்த சிவ) ஆகம உண்மைகளை, விரிவாக விளக்கிக கூறும் வீறு பெற்றோனே !

---

மலையில் மழைபெய்தால மக்கட்கு வாழ்வாம்
தலைமை அறிஞரால, சாரும் தவநிலையே.

விசித்து நின்ற ரணமுக துங்க - அணி, வகுத்து நின்ற போர்க்களத்தில வீரப் பொலிவு காட்டியவனே !

வெம் சூர் உடல் பிளந்த அயிலுடைக் கதிர்வேலா உக்ர சூரன உடலை இருபிளவு ஆக்கிய கூர்மை ஒளிமய வேலோனே !;

(அமணர்.........அடியவர்க்கு எளியோனே !)

அமணர் அடங்கலும் கூடலில் திரண்டு - சமணர்கள் அனைவரும், (உவகை) மதுரையில ஒனறு கூடி :

கழுவில உதைந்து உதைந்து ஏற விட்டு நின்ற அபிநவ - (கைகால்களை பலதரம்) உதறும் நிலையில, கழு மரத்தில் ஏறும் படி அவர்களைக கைவிட்டு நின்ற, (புகழுடைய திருஞான சம்பந்தரில இருநத) புதுமையனே !

கஙகா நதிககு மைந்த - (தகுதியுள) கங்கையின தநயா !

அடியவர்க்கு எளியோனே - (இன்ப) அன்பர்கட்கு எளிமையில் வநது அருள்பவனே !

(அமரர்.........பெருமானே !)

அமரர் வணஙகு கந்தா - ககன உலகர் வழிபடும் கந்த சுவாமீ !;

குறத்தி கொங்கைதனில் முழுகும் கடம்பா - குறவர் குல வள்ளியாரின் குயஙகளில கலககும் (மாபெரும்) கடப்ப மாலையனே !;

மிகுதத செம்சொல் அருணை நெடும் தடம் கோபுரத்து அமர்ந்த அறுமுகப் பெருமானே - மிகக புகழுடைய அண்ணா மலையில், உயர்ந்து அகன்ற திருக்கோபுர( வடபுற)த்தில், அமைதி வெளிப்பட எழுந்தருளிய பெருமையில உயர்ந்த பெரியோனே !;

(தமர.........மரண பக்குவம் ஆம் நாள்.)

---

இனபதுனபம் எவ்வளவு நேர்ந்தாலும், என்றும்மெய் மனனும் தவத்தர், மலைபோல் அசைவிலரே.

தமர குரங்களும் - (ஊன்றி நடக்கும் போது) ஒலிக்கும் குளம்புகளும் ;

கார இருள் பிழம்பு மெழுகிய அங்கமும் - கரிய இருளைக் குழம்பாக்கிப் பூசியது போன்ற உடலும் ;

பார்வையில கொளுந்து தழல் உமிழ் கண்களும் - (குறு குறுதது) நோக்கிக் கொளுததும் கனல் கக்கும் கண்களும் ;

காளம் ஒத்த கொம்பும் உள கத கடமா மேல் - விடம் போல் கறுத்த கொம்புகளும் உடைய கடுஞ்சின (மதயானை போன்ற) எருமைக் கடாவின் மேல் ;

தனி வரும் அந்தகன் பாசம் விட்டு எறிந்து அடவரும் என்று சிந்தாகுலத்து இருந்து - ஒபபற்ற நிலையில் (உறுத்து) வரும் இயமன, (சூக்கும) பாசத்தை வீசி எறிந்து, (எனனைக்) கொல்ல வருவனே எனறு மனம் வருந்தி இருந்து ;

தமர் அழ மைந்தரும் சோகம் உற்று இரஙக மரண பக்குவம் ஆம் நாள் - உறவின முறை கதறியழ, மக்கள் முதலி னோரும் கணணீர் பெருக்கி ஒபபாரி வைக்க, மரணம் குறுகும் அந்நாளில் ;

கமல முகஙகளும் - (தெய்வத) தாமரை போன்ற (ஆறு) திருமுகங்களும் ;

கோமளத்து இலங்கும் நகையும் - (புனித) அழகொடு ஒளி செய் புன்னகையும் ;

நெடும் கணும் - நீண்ட (பன்னிரு) திருக்கரங்களும் ;

காதினில் துலஙகு கனக குதம்பையும் தோடும் - திருச் செவிகளில் பளபளக்கும் பொன்னால் ஆன குதம்பையும் தோடும் ;

வஜ்ர அஙகதமும் - வயிர (த்தோளணி யெனும்) வாகுவல யங்களும் ;

---

பேரினப முத்தி பெறவிருப்பம் உள்ளதேல்,
நேரிருக்கும் பாச நிலைபழிய வேண்டுமே.

அடல் சுடர் வேலும் (அகப்பகை புறப்பகைகளை) அழிக்கும் பளபளக்கும் வேல் படையும்;

கடிது உலகு எங்கணும் தாடி யிட்டு வந்த மயிலும் விரைந்து மாநிலம் முழுவதும் பிரயாணம் செய்யும் மயிலும்;

இலங்கு அலங்கார பொன் சதங்கை கழல ஒலி தண்டை அம் காலும் ஒக்க வந்து - ஒளி வீசும் அழகுடைய பொனனு லான சதங்கை, வீரக் கழல், ஒலியுடைய தண்டை (முதலியன) அணிந்த அழகிய திருவடிகளும் ஆன இவைகள், ஒரு சேர வந்து சேவை வழங்குமாறு;

வரம் எனக்கு அருள் கூர்வாய் - (நலம் சிறந்த) வரத்தை அடியேற்கு நலகி யருளும், (எ - று).

விரிவுரை.

சிவ சிவா! "நின்னை எண்ணாத தக்கன் மகள் என்னும் நாமம் பெற்றனன; அப்பெயர் அகல அருளும் என்று, விமலை விறுவிறுத்துத் தீயில் விழுநதாள. அதனபின், மாபெரும் தவம் செய் மலைமன்னன மகளாகி வநதாள். அத்தேவியை, 'இமகிரி வந்த பொன் பாவை' என்கிறேம்.

வஞ்சிக கொடிபோல துவளும் இடையை எண்ணி, 'பசசை வஞ்சி' எனறு பகர்வம்.

மாபெரும் சிவத்தை மணந்த பின், கருணைக் கருவில் அனைததையும் வைத்துக் காக்கினரு ளாதலின், 'அகில தலம் பெறும் பூவை' எனறு அறிகிறேம். (பூவை - நாகணவாய்ப் பறவை; அதை மைனு எனபர் மககள்.)

அக்கிரமததை அழிககும் அளவிலா ஆற்றல உடைய அந்த அனனையை, 'சததி அம்பை' எனறு சாற்றுவம்,

அம்பிகை என்னும் அந்தப பரையின ஞானப பாலைப் பருகினெ.

---

நீர்வற்ற நீர்வாழ் வனஅழியும், நெய்திரியின்
சீர்வற்றத், தீபமிலை; சேர்முத்தி அம்பிலையே

செயற்கை சிலிர்க்கும் அமயம், இயற்கைத் தேவதை யிடர் அடையும். தாழும் அத்தரும தேவதையின் தலை நிமிரச் செய் பவன் நீ. ஆதலின், 'இயல் நிமிர்த்திடுவோனே' என்று பெரும! மேதகு நின்னை ஏத்துகின்றார் மேலோர்;

எங்கும் வியாபக சிவத்தை, இறைவன் எனறுரைப்பது தமிழ் நடை. குரு சிஷ்யக் கிரமத்தைக் குவலயம் உணர, சிஷ்ய பாவனையில் நின்றார் சிவபிரான. வணங்கும் முறையில் வணங் கிய சிவனார் முன், குருமுகமான கோலம் கொண்டனை!

பாசம் கெட்ட பசு, பதி ஞானத்தால் பரத்தை யடையும்; அந்தப் பதிபசு பாச இயல்புகளை, ஆகமங்கள படிக்கின்றன. ஓம் எனும் நாதத்தில, விரிவான அசசெய்திகள் விளங்கு கின்றன.

ஓமில் இருந்தே உலகங்கள் உதித்தன. உயிர்கள் யாவும் ஓம் எனும் அதனில் உயிர்க்கின்றன. என்றும் குமரா! நீ அந்த ஓமின் பொருளாய் உறைகின்றாய். சீடரான சிவனார்க்கு சண்ட பரசண்டமாக அநுட்பத்தை விரிவுரை விளக்கம் செய்த நின்னை,

'ஆகமப பிரசங்கம் உரை செயதிடும் ப்ரசண்டா!' என்று, ஓதி எம் உள்ளம் உருகுகின்றதே!

ஆணவ சொரூபம் சூரபதுமன். இருள் மயமான அவன் உடலை இரு பிளவாக்க, ஒளிமய ஞானசக்தியை ஏந்திய நின்னை, அயிலுடைக் கதிர்வேலா' என்று ஆவலித்து அழைப்பம்.

மந்திர தந்திரத்தில் வல்லவர் சமணர்கள். மதுரைக்கு வந்த சம்பந்தரை மறுத்தனர், வல்லடி வழக்கை வளர்த்தனர். தொல்லைச சுரவாதில் தோற்றனர். அனல வாதத்திலும் தோல்வி யடைந்தனர். மூன்றும் வாதம் புனல் வாதம். இவ் வாதில் தோற்றவர், கழு ஏறுவது என்று துணிந்து கூறினர்.

---

நன்றி மறவார் நலம் பெறுவர்; அப்பயன்தான,
துன்றுமெந்த வர்த்தகத்தும் தோன்றுவது இல்லையரோ.

கண்ணுதல் இடத்தில் கனலுளது ; புனித முடியில் புனல் உளது ; ஆதலின், 'கனல் எங்கள் கனல் ; 'புனல் எங்கள் புனல்' என்று, புளகித்து உரைத்தார் புகலிப் பிரான.

விருது கூறிய சமண் கொடி வீழ்ந்தது நித்திய சத்தியம் நிலைத்தது. உணமை யறிந்தபின், எவரும் உய்யலாம் ; அங்ஙனின்றிச சமணர்கள், மானம் அழிந்ததே என்று, கழுவில் ஏறத் தொடங்கினர்.

"நீரேன் வாளா இறககினதீர் ! அரனுக்கு ஆளாய் உய்ம்மினகள் "

என்று, பல சொல்லித் தடுத்தார் பாலரு வாயர். கேட்டிலர். ஏறிய கழுவில, கையும் காலும் உதைத்துக் கொண்டு சமணர் ஒழிந்தனர்.

திருஞான சம்பநதரில் இருந்து, புதுமையான இப்படி ஒரு ஆடலைப் புரிந்த உன்னே, 'அபிநவ' என்பதில, மகிழ்கிறது எங்கள் மனம்.

பாவத்தைக் கழுவும் அடையாளமான வரநதி மைந்தனுன நின்னே, 'துங்க கஙகா நதிக்கு மைந்த' என்று கூறுவார்உளளம் குளிரும்மே !

அமுதம் உணடவர்கள் அமரர்கள் ; அதனுல் பலநாள் ஜீவிதர் ஆயினர். ஆயுள் பெருக்கம செய்து கொண்டபின் அவர்கள என்றும் உனனே ஏத்துகின்றனர். அதனுல,

'அமரர் வண்ஙகு கந்தா !' எனறு அழைபபம்.

இசசா சக்தியார் குறமகளார. அவர் அனபு கண்டு அருள் பாலித்தனே ! நீ போக வடிவன் எனபதை, அணிந்த கடப்ப மாலையே அறிவிக்கினறதே. அதனுலதான்,

'குறததி கொஙகைதனில் முழுகும் கடம்பா !'' என்று, உன்னைக் கனிவொடு மனத்தால கருதுகின்றோம்.

---

பழிபாவம் தோனறிப் பரவில், தடுப்பவரார்
வருமந்தப் புண்ய வாய்மை வளர்பபோமே.

வாழ்வு பெறக் கவுதமர் இங்கு வழிபட்டார். சிவனுர் கண் ஒளியால், உலகம் முழுதும் உய்கிறது எனலே, உண்ணுமுலே யார் காட்டினுர். பஙகு மூனிவர் பலகாலம் தவம் செயது, முடமான கால்கள் முளைககப பெற்றுர். வசசிராங்கதன் பெரும் வளம் பெற்றுன். வல்லாளனுக்கு இறைவர் மகவாகி வந்தார். பேறு பெற்றுர் பிரபுட தேவர்.

இபபடி யெல்லாம் உயர்ந்தோர் புகழும் சோணுசலத்தை, 'செஞ்சொல் அருணே' என்று உலகம் உவநது உணர்கிறது. குகை நமசிவாயர் முதலினேர் போற்றும் அத்தலம், ஜோதி வடிவம் என்றும் சொல்லப் பெறும். ஆண்டுதோறும், கார்த்திகைத தீபத்தால் அது அறிவிக்கப் பெறுகிறது. அபபதியில உள்ள ஆலய கோபுரம், தூல இலிஙகமாகத துலங்குகிறது.

இராஜ கோபுரம், பிரபுடதேவர் புதுக்கியது. அடுத்திருப பது வல்லாள மன்னா வளர்தத கோபுரம். அதனில் இருந்து குருமுகமாகி வந்து அருளிய பெரிய பொருளான உன்னே, 'நெடும் தடம் கோபுரத்து அமாந்த பெருமாளே! எனறு விளிப்பதன்றி, புனித உம் சொருபததை எபபடிப் போற்றுவது எனறு புரியவிலலேயே ?

பிரபோ! கேண்மை யடியேன் விண்ணபபத்தைக் கேட் டருளும்!

இயற்கையைக் காப்பவர் நீர்! செயற்கைப் பாழில் சிதைந் தவன் அடியேன. ஓம் பொருளே ஓதுபவர் நீர்; புற வாழ்க்கை யில புந்தி கெடடவன யான. குருடலேப் பிளந்த உம் ஞான சத்தி, அநியாய என ஆணவத்தை அழிக்காதா ?

திருஞான சம்பநதரில் அதிர்ஷடிததுபோல், என்னில நீர் இருந்தால ஆகாதா ?

அடியார்ககு எளியவனுன நீ, அந்த எளிமையை என்பால் காட்டினுல் ஆகாதா ?

---

ஆமை குளித்துவர ஆழ்குளததில் விட்டிடலபோல,
தீமையரைத் தூரம்விடில், ஏமாற்றித் தீர்வாரே.

குறமகளிடம் உறவு கொண்டதுபோல், என் உயிரில் நீ இணைவது தான் இயலாதா ?

குன்றேறி நின்ற கோலம்போல், எவரும் காணுமாறு கோபுரத்திருந்த கோவே !

கருத்த காயமும், கனல் கக்கும் கண்களும், கொடிய காள மொத்த கொம்புகளும், மதயானை போன்ற தோற்றமும் உடையது இயமன் ஏறும் எருமைக் கடா. ஐயோ! நடந்து வரும் அதனால் நிலமுழுதும் அதிரும்மே ! அப்பப்பா ! எவ்வளவு பெரிய குளம்புகள் !

ஈடும் எடுப்பும் இல்லாத தோற்றத்தில், அதன்மேல் காலன் அமர்ந்து, பாசம் வீசி என்னைப் பற்ற வருவனே ! அதை நினைக்கிறபோ தெல்லாம் என் நெஞ்சு வெடித்து விடும்போல் இருக்கிறதே !

உறவினர் மக்கள் ஒருங்கு திரண்டு, குய்யோ முறையோ எனறு குமுறுவரே !

நடுங்க வரும் அந்த மரண நாளில், ஆறுமுகமும் புன்னகையும் தோன்ற, வா ஐயா !

வளமான செவியணியும், வாகுவலயங்களும் பளபளக்க வா இறைவா !

எதிர்ப்பாரை வீழ்த்தும் வேலுடன், வா பெருமா ! தாவி வரும் தனிமயிலேறி வா துரையே !

இலங்கு அலங்காரம் பலவற்றுடன், சதங்கை, வீரக் கழல் தண்டை முதலியன கலகலப்ப, வா குமரா !

பாப விமோசம் செய்யும் பாத தரிசனம் தர, வா பரம!

உனது ஊர்தியைக் கண்டதும், பொல்லா எருமை' புறங் காட்டும். உனது அணி ஒளி கண்டு, மரண இருளழியும். உனது ஒளிமயமான வேல் கண்டு, காலன் ஓட்டம் காட்டுவன்.

---

வாயால் தவளை அழிதலபோல், வாய்மையிலா
வாயால் குழறி, வலியழிவார் பேதையரே.

உனது பாத அணிகல நாதம், நும் பொருள் நுட்பங்களை உணருமாறு உணர்த்தும்மே; இப்பேறு அடியேற்கு நேர, வா ஐயா !

தனிப்பெரும் அடியேன் தகுதிபெற்று வாழும் வரத்தைத், தாதாவே! நீ தா! தா என்று, விநயம் காட்டி விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ் வளம் !
ஓம்.

---

## உபநிஷதங்களின் உள்ளொளி

( ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி )

விஞ்ஞானவானகள் யார் ? என்ற கேள்விக்கு விடையை முந்தின வல்லியில் கண்டோம். எல்லா உயிர்களுள்ளும் ஒளிரும் ஆத்ம சக்தியை எவன ஒருவன் கண்டு இன்புறு கிருனே, எவன் ஒருவன இந்த ஆத்ம தரிசனத்தைத் தன அக அறிவால் உணர்கிருனே அவனே உண்மையான மேதாவி. படிப்புக்கும் கல்விக்கும் இடையே பெருத்த பேதமுண்டு. படிப்பு என்பது எண்ணெழுத்துக்களை அறிவது. அதாவது எழுத்தையும் எண்ணையும் ஆராய்ந்து கற்பது. படிப்புக்கு இறுதிப் பட்டம் எனபது நமது வாழ்க்கையில நாம் காணக் கூடிய அனுபவம். ஆனல படிப்பின் மூலமாகப பட்டம் பெற்றவர்கள் எலலோரும் உண்மையில கற்றறிந்தவர்கள் என்று போற்றத் தகுந்தவர்களாக இருப்பதில்லை. எல்லாமாக நிற்கும் ஒன்றைக் காணும் அறிவே உண்மைக் கலவியாகும். எப பொருள் யார் வாய்க் கேட்பினும், எபபொருளை எங்கே காண் பினும், அப பொருளின மெய்ப் பொருளைக் காண்பதுதான

---

நெலபயிரால் புல்லழியும், நேர்மையால வீண்பகைபோம்,
கல்வியுளார் நட்பால், கடுஞ்சினம்போம் கண்ணியமே

அறிவு. இதையே வள்ளுவப் பெருமானும் தமது தெய்வத் திருக்குறளில் கூறுகிருர். ஆத்மா என்ற உண்மைப் பொருளைக் காண்பவனே மேதாவி என்று கதோப நிஷத் ஆசிரியரும் கருதுகிருர். ஆத்மா என்பது சரீரமாகிய ரதத்தை உடைய அதிகாரி. உடலே ரதம். புத்தியே சாரதி. மனமே கடிவாளம். இந்திரியங்கள் குதிரைகள். அவற்றின் விஷயங்களே பாதை எனபதை உணர்ந்து, இந்திரியக் குதிரைகளைச் சென்ற விடத்தில் செல்ல விடாது, ஆத்மாவைக் காண உண்முகமாத் திருப்புவன் உண்மை மேதாவி; விக்ஞானவான் என்று நாம் இது வரை கண்டோம். இனிமேலுள்ள நான்காவது வல்லியைக் காண்போமாக!

நான்காவது வல்லியின் முதல மந்திரத்திலேயே மனிதன், ஏன் புறத்திலே அதிகமாக தன்னை இழக்கின்ருன் என்பதற்குக் காரணம் கூறப்படுகிறது. ஸ்வயம்பூவாகிய பரமாத்மா, இந்திரியங்களைப் புறத்தே செல்லும் தன்மையோடு படைத்திருக்கிருர். எனவே, மனிதன் புற உலகைக் காண்கிருனேயல்லாது ஆத்மாவைக் காண்பதில்லை. ஆனுல் மனிதர்கள் எல்லோரும் இப்படிப் புறமாகவே செல்கின்றனரா? இல்லை, இல்லை. சில தீரர்கள் அம்ருதத்வத்தைப்பெற ஆவலுற்றவராக தங்கள் அகக் கண்ணைப் புறப் பொருள்களிலிருந்து திருப்பி ஆத்மாவைக் காண்கினறனர். தங்களுள்ளேயே காண்கின்றனர். இதையே பகவான் ஸ்ரீ கிருஷ்ணன ஸ்திதப்ரக்ஞனுடைய இலக்ஷணங்களை வருணிக்கையில குறிப்பிடுகிருர்.

புலன்களின தன்மை புறத்தே ஓடுவதுதான். ஆனல், ஓடும் அவற்றைத் தடுப்பவன்தான் உண்மை தீரன் எனபது இங்குக் குறிப்பு மலைகளில விழும் மழையானது ஆருகப் பெருகி ஓடிக் கடலில கலக்கிறது. உலகைச செழுமைப் படுத்த வென்று ஓடும் அருவி வீணுக விரைவில்

பொருள தொலைத்தான் சந்தேகம், எல்லார் மேலும் பாயும்;
அருளுடையார், அன்னதுகண் டாத்திரமே கொள்ளாரே.

கடலில் சென்று கலந்து விடுமாகில், அதனை நாம் பூரணமாகப் பயன் படுத்தினவர்கள் ஆகமாட்டோம். எனவே, அதை ஆங்காங்கு அணைபோட்டுத்தேக்கி வேறு ஓரிடத்திற்குக் கால்வெட்டி இழுத்துச் சென்று பயிரிடுகிறோம். கட்டிடக் கலைத் தீரர்களின் சாமர்த்தியம் என்று பெரும் பெரும் அணைகளைக் கண்டு பாராட்ட நாம் தயங்குவதில்லை. ஆனால் நமக்குள்ளிருந்து நாள் தோறும் பெருகி வரும் ஆத்ம சக்தி, புலன்களென்னும் ஆறுகள் வாயிலாக ஓடி வீணாவதை மறந்து வாழ்கிறோம். இச சக்தியைப் பாழாக்காது உள்முகமாகத் திருப்புபவர்கள் தீரர்கள் தானே. நம் கண் புறத்தே திரும்பி யிருப்பதால், நாம் புறப பொருளகளையே பார்த்து, நமக்குள்ளிருக்கும் ஆத்ம வஸ்துவைப் பார்க்கத் தவறுகிறோம். ஆனால் உண்மையைக் காணும் நாட்டமுடையவர்கள் உள்ளிருக்கும் (கட+வுள்) கடவுளைக் காண்பவர்கள். அவர்களை ஆவ்ருதத் சக்ஷு:— உள்முகமாக்கப்பட்ட பார்வை உடையவர்கள் என்று கூறுகிறான் காலதேவன்.

இப்படி உள்ளே நோக்காதவர்கள் வாழ்க்கை என்ன வாகும்? உள்முகப் பார்வை உடையவர்கள் எதைப பெறுவர் என்ற கேள்வி நம் உள்ளத்தில் எழுவது நியாயமே. அதற்கு விடை அடுத்த மாத்திரததிலேயே வந்து விடுகிறது. புலனகளின் ஆசைவாய்ச் சென்ற சிந்தையர்களானவாகள், ' பாலர்கள ' என்று கூறுகின்றான் தர்மராஜன். ஏனெனின் பாலாகளுக்குப் பகுத்து அறியும ஆற்றல் கிடையாது, அந்த க்ஷணத்திற்கு சுகம் தரும் விளையாட்டில் ஈடுபட்டிருக்க ஆவல் கொண்டிருப்பார்களேயன்றி நிரந்தர சுகத்திறகுப் பாடுபட மாட்டார்கள். அதுபோல அனுபவிக்கும் காலத்தில் மாததிரம் இன்பம் கொடுக்கும் புலனிசசையில் சுகம் காணும் மக்களையும், பாலர்கள் என்றே காலன அழைக்கிறான. அவர்கள் ம்ருத்யு

---

மெய்யொழுக்கம் கொண்டகுடி, மென்மேல் உயர்வடையும்;
நெய்கலந்த பால்போல நிகழ்கின்றார் அனனவரே

அல்லது மரணம் அல்லது அழிவினுலே விரிக்கப்பட்ட பாச வலையில் பட்டு மாளுகினறனராம். "தே ம்ருத்யோர் யாந்தி விததஸ்ய பாஸம்". யாந்தி என்றால் விழுகிறவர்கள் என்று பொருள். பாச வலைக்குள் போய் விழுகின்றனர். ஆ! என்ன கஷ்டம்! இறைவா ;—பாசாடவிக்குளளே வீழாமல் மனதற்ற பரிசுத்த நிலையை—அருள்வாய் எனறு இரங்கி, அழுது தாயுமானருடன நாமும் சேர்ந்து அழத் தோன்றுகிறதல்லவா! காலன் கையில் இருக்கும் பாசம் மரண காலத்தில் தான் நம்மீது போடப்படுவதாகப் பலரும் கருதுகின்றனர். ஆசை என்ற வடிவத்தில் இந்தப் பாசமே வலையாக நம்மை விழுங்குகின்றது. இறுதிக் காலத்தில் தானு? இல்லை. ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நொடியும், நம்முள்ளத்தில எழும் ஒவ்வொரு ஆசையும் நம்மை இந்த வலையில் மேலும் சிக்க வைக்கிறது. ஒவ்வொரு ஆசையும் கயிறுபோனறு மாறி நம்மை இன்னும் கட்டிப போடுகிறது. சிலந்தியின வலையில சிக்கிய பூச்சி தன்னை விடுவித்துக கொளவதற்காக அசையும்போதெல்லாம், அது தன்னையறியாமல் சிலநதிககு அருகிலேயே நகாந்து செலலுமாறு, சிலநதி தன வலையை அமைத்திருக்கிறது. அதுபோல ம்ருத்யுவின வலையும் கண்ணுக்குப புலப படாமலேயே நமமைக கட்டிப போடும் தனமை யுடையதாக இருக்கிறது. புலனகளின பின ஓடுபவாகள அவ்வலையில் நன்கு சிக்கி விடுகினறனர். இனி அவர்கள் மீறுவது எப்படி? ஆனால அம்ருதத்வம் அல்லது நித்யத்வததைப் பற்றி அறிநத தீரர்கள், ஓடும் இச் சுகத்திற்கு ஆசைபபடுவதில்லை, விரும்புவதில்லை. தேடுவதுமில்லை 'ந பராத்த யந்தே'—மாஙகாய்ப் பாலுண்டு மலைமே லிருப்போர்க்குத தேஙகாய்ப்பால் ஏதுக்கடி குதம்பாய' எனறு பாடினர் சித்தர். கனியின சுவை பற்றி ஓரளவேனும் அறிநதவர்கள் காயக்கு ஆசைபபடுவார்களோ?

---

மனனுநெயப் பாத்திரத்தில் மேலும்நெய் வார்ப்பதுபோல்,
மன்னர் மதித்தாரை மக்கள் மதிப்பாரே.

நீ அறிந்து கொள்ள ஆசைப்பட்டாயே அந்த பிரம்மம் ஆத்மாவே. எதன் மூலமாக ஸப்த, ஸ்பரிச, ரூப, ரஸ, கந்த மாகிய அனைத்தும் அறியப் படுகிறதோ அந்த ஆத்மாவுக்குப் புறம்பானது ஏதுமில்லை. அது அறியாததும் ஏதுமில்லை. அதுவே உனக்குள்ளிருந்து எல்லாம் செய்கிறது. எந்த ஞானி நனவிலும், கனவிலும் தனக்குள்ளிருந்து இயக்கும் பொரு ளாகவும், காணும் பொருளாகவும் இருக்கும் ஆத்மாவை அறிகிறானோ, அவன் சோக, மோகங்களைத் தாண்டியவன். அவன் சோகிப்பதில்லை. "தீ ரோ நசோசதி"; என்று அடுத்து வரும் இரு மந்திரங்கள் உபதேசிக்கின்றன.

கர்ம பலங்களைச சுமப்பதாகவும், ஆத்ம ஸ்வரூபமாகவும், எப்போதும் நமக்கு அருகில் இருப்பதாகவும், சென்ற காலத் திற்கும் எதிர்காலத்திற்கும் என்றைக்கும் நமக்குள் தங்கும் உயிர்க்கு உறுதுணையான ஆத்மாவைக் காண்பவர்க்கு பயம் தோன்றாது. அடுத்து வரும் மந்திரங்களில் ஆதமா எப்படி உடலுள் ஒளிர்கிறது என்பது விளக்கப் படுகிறது. இதயக் குகையுள் வாழும் ஆத்மாவை மனததினாலேயே காணக்கூடும். உலகைபபற்றும் மனம் அசுத்தமனம். அசுத்த மனத்தை விவேக, வைராக்கிய, முமுக்ஷத்வத்தாலும், சமதமாதி சாதனங்க ளாலும், குருநாதரின உபதேசத்தாலும் பரிசுத்தம் செய்து பிரம்ம வஸ்துவை உணர வேண்டும். பிரம்மத்தைக கண்டவன் எங்கும் அந்த ஏக வஸ்துவே நிறைந்திருபபதையும், அதுவன்றி வேறெதுவும் இல்லை என்பதையும் அறிதல் வேண்டும். எவன அக்ஞானத்தின காரணமாக பிரம்மம் எனபதை மறந்து பல வாகக் காணகிறானோ அவன் மீண்டும் மீண்டும் இறக்க நேரிடும் என்று பேசப்படுகிறது.

ஆத்மா எங்குள்ளது? ஆத்மாவின் ஸ்தானம் எங்குள்ளது என்பதறகுத தியானம் புரிய ஏற்ற வகையில் ஈண்டு ஓர் மந்

---

என்றும் பொறுப்பர் எளியவா என்றிகழில்,
ஒன்றுகின்ற நல்லோர், ஒருநாள் ஒறுப்பாரே.

திரம் உபதேசிக்கப் படுகிறது. கட்டைவிரல் அளவு பரிமாணத்தோடு உடலின் மையப பகுதியாகிய இதயத்தில், சென்ற காலத்திற்கும் எதிர்காலத்திற்கும் ஈசனுகிய அப்பொருள் உள்ளது. அதை அறிந்தபின் எவரும் பயப்படுவதில்லை. இதுவே அது. "அங்குஷ்ட மாத்ர: புருஷே மத்ய ஆத்மனி திஷ்டதி! ஈஸானே பூத பவ்யஸ்ய நததோ விஜு குப்ஸதே— "ஏதத் வை தத்"

ஆதமா அளவற்றதாக, எல்லையற்றதாக, எங்கும் நிறைந்ததாக இருப்பினும், அதைத் தியானம் செய்யவேண்டும் என்பதற்காக, ஜீவனின் ஸ்தானமான இதயத்தில அஃது இருப்பதாகக் கூறபபடுகிறது. ஒரு குறிபபிடட இடததில் தியானம் முறையாகப் பயினுல்தான் ஆதம ஜோதியை ஓரளவு காண முடியும் ஒரு இடத்தில் கண்டபினபு அதன ஸர்வ வ்யாபகத் தன்மையையும் உணர்ந்துகொள்ள முடியும். எனவேதான் ஆதமா இதயத்தை இருபபிடமாகக் கொணடுள்ளதாகக் கூறப் படுகிறது. இதயததின வெளியிடம் ஒவ்வொரு மனிதனுக்கும் அவனது கட்டைவிரலின பரிணுமமே உடையதாக இருக்கிறது. இவ்வெளியையே இதய தாமரை என்றும குறிப்பிடுகின்றனர். அவ்விதய தாமரையில குடியிருப்பது ஜீவன். ஜீவனின ஸ்வரூபமாக விளஙகுவதும் பரமாத்மாதான் அல்லவா.

'பூவினிற் கநதம் பொருந்திய வாறுபோல்
சீவனுக் குள்ளே சிவமணம் பூத்தது'

என்று அழகான உதாரணம் காட்டுகிருர் திருமூலப்பெருமான. ஜீவனின் ஸ்வரூபத்தையே சிவஸ்வரூபமாக இதயத்தில் அங்குஷ்ட மாத்திரமாகத் தியானம் செய்ய உபதேசிக்கிருர்.

'அப்பினிற் கூர்மை ஆதித்தன் வெம்மையால்
உப்பெனப பேர்பெற்று உருச் செய்த அவ்வுரு

---

சோறும் கறியும் சுவையுடனே சிததித்தல்,
வீறுதரு நடவினே வித்தின் விளைவாமே.

அப்பினிற் கூடி அஃதொன்றா ஆகுமாறு போல்
செப்பினிற் சீவன் சிவத்துள் அடங்குமே

இந்த ஆத்மாவின் ஸ்வரூபத்தினைப் பற்றி மேலும் விளக்கு கிறான் காலதேவன்,

அங்குஷ்ட மாத்ர: புருஷோ ஜோதிரி வா தூ மக: |
ஈஸானோ பூத பவ்யஸ்ய ஸ ஏவாத்ய ஸ உஸ்வ |
ஏதத் வை தத் ||

" அப்பொருள், கணுவிரல் பரிணாமமுள்ள அது, புகை யற்ற ஜோதியாக ஒளிருகிறது. அவனே இன்னும் உள்ளான் நாளையும் இருப்பான. இதுவே அது " எனறு மிக அழகான மந்திரம் அடுத்துத் துவஙகுகிறது.

புகையற்ற ஒளி அது. 'தேச விளக்கெல்லாம் ஆனாய் நீயே' எனறும், திரு ஐயாறு அகலாத செம்பொற் சோதி என்றும், ஒளிப் பிழமபான சிவத்தைப பாடுகின்றனர். அச சோதி, மாறாத ஜோதி. மஙகாத ஜோதி. அருட் பெருஞ் சோதி எனறு போறறப்படுகிறது. அஜ்ஜோதி என்றும் உள்ளது. இன்றும் இருக்கும், நாளையும் ஒளிரும். என்றும் துலஙகும். " நெருநலையாய், இன்றாகி, நாளையாகி " என்றும் விளஙகும் அப்பொருளை உள்ளே தியானம் புரியவேண்டும்.

இதை மறந்து பல இடஙகளிலும் ஆத்ம சக்தியைச் சிதற விடுதல் கூடாது. இபபடிச சிதற விடுவதற்கு ஒரு அழகிய உபமானம் காட்டப்படுகிறது. மலைமீது கொட்டப்பட்ட நீரா னது பல பாகஙகளிலும் சிதறி எவ்விதமான பயனும் பெறாது வீணாகி விடுவது போல, பொருள்களை ஆத்மாவாக் காணாது, வெவ்வேறு பொருட்களாகக் காண்பவர்களும் பலபல பக்கங களிலும் பொருள்களின் பின்னர் ஓடிக் கழிக்கின்றனர்.

இதற்கு மாறான மற்றொரு உதாரணமும் அடுத்தபடியாக காலதேவனின வாக்கிலிருந்து வருகிறது. சுத்த ஜலத்தை

---

வலிதாம் வறுமையினும், வாய்மையுளர் பண்பழியார்
புலிதான் பசித்தாலும் புல்லுண்ப தில்லையரோ.

சுத்த ஜலத்தில் கொட்டினால் இரண்டும் ஒன்றாகக் கலப்பது போல, தனித்து நிற்கும் ஜீவாத்மா உள்முகப்பட்ட சிந்தனையாலும், தியானத்தாலும் ஸர்வ வ்யாபகமான பரமாத்மாவுடன் கலந்து பேரின்பத்தைத் துய்க்கிறது. ஜீவாத்மாக்கள் ஒன்றிலிருந்து ஒன்று பிரிந்தவை என்ற எண்ணம் ஒழிந்து, எல்லாம் *ஒன்று என்று மெய்யுணர்வினால் வரும் சுகத்தைப் பெற்று* இன்புறவேண்டும். குடத்தண்ணீரை கங்கையில் கொட்டினால் அது குடித்தண்ணீர் என்ற தனித்தன்மை இழந்து கங்கை என்ற பொதுத் தன்மையைப் பெறும். இதுபோன்று, ஜீவன் என்ற தனித்தன்மை மறந்து சிவம் என்ற ஏகத் தன்மையைத் துய்க்க முயலவேண்டும். இவ்வாறு காண்பவன், பொருள்கள் பலவாக இருப்பினும் உள்ளது ஒன்றே என்பதை உணர்கிறான். பொன் ஒன்று பூண்கள் பல. மண் ஒன்று பாண்டம் பல. தோட்டம் ஒன்று செடிகள் பல. செடி ஒன்று மலர்கள் பல என்பதை உணர்கிறான். இவ்வாறு உணர்வதே வாழ்க்கையின் நோக்கம். இந்த உணர்வை ஏற்படுத்தவே நமது *ஸ்ருதியாகிய தாய்* பாடுபடுகிறாள். உலகின் எந்தத் தாயும், எந்தத் தந்தையும் செய்யாத ஒரு அரும் செயலை சுருதித்தாய் செய்கிறாள். தன் மக்கள் எல்லோரும் ஆத்ம ஒருமைப்பாட்டை உணர்ந்து ஆனந்த ஸ்வரூபிகளாக, உண்மை ஒளிகண்ட உத்தமர்களாக விளங்கவேண்டும் என்பதே சுருதித் தாயின் நோக்கம். அருள் தாயாகிய வேத மாதாவின் எண்ணத்தை உணர்ந்து அவள் நமக்கு உபதேசிக்கும் தாரக மந்திரமாகிய 'ஒரு ஆத்மாவே எங்கும் உள்ளது' என்ற உயரிய கருத்தை உணர்ந்து பேரின்பம் துய்ப்போமாக. வேதத் தாயின் சொற்களில் அசையாத உறுதியான நம்பிக்கையும், பூரண பக்தியும் கொண்டு நாம் அவள் வாசகப்படி வாழ்வோமாக.

இத்துடன் நாலாம் வல்லி முடிவடைகிறது. இவ்வல்லியில் குறிப்பிட்டுள்ளபடி இதய குகையில் அங்குஷ்ட மாத்திரமாக இருக்கும் ஆத்மஜோதியைத் தியானிப்போமாக!

வாழ்க வேத உபநிஷத கோஷம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

---

பட்டிமக்கள் புன்சொல், பரிவுடையோர் தாம்பொறுப்பர்;
முட்டு பசுவைத் திருப்பி, முட்டுவார் இல்லையரோ.

# குமாரஸ்தவ விரிவுரை-3

(திருப்புகழ்சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B.A., B.T.,)

ஷண்மத பதயே நமோநம:
ஆறு சமய தலைவனே போற்றி போற்றி.

## சமயங்கள் வரலாறு :

மக்களது அறிவு தெளிவு பெற்றபோது தான் இறைவன் இலக்கண முதலியவை செம்மையாக விளக்கம் பெற்றன. ஆனல் மக்களது அறிவுநிலை பல வேறு திறத்தினதாக இருக்கிறது. அதற்கேற்ப காலந்தோறும் மாறும் சீலத்தினை அடிப்படையாகக் கொண்டு பலபல சமயங்கள் தோனறலாயின. இவ்வாறு தோன்றிய சமயங்களைப புறப்புறச சமயம், புறச்சமயம், அகப்புறச சமயம், அகச்சமயம் என நான்கு பெரும் பிரிவுகளி லடக்கலாம்.

## புறப்புறச் சமயங்கள்

1. உலகாயதம் 2. மாதயமிகம் 3. யோகசாரம் 4. சௌத்திராந்திகம் 5. வைபாடிகம் 6. ஆருகதம் என ஆறுகும்.

## புறச் சமயங்கள் :

1. *தருக்கம்* 2. *மீமாஞ்சை* 3. *ஏகான்மவாதம்* 4. *சாங்கியம்* 5. யோகம் 6. பாஞ்சராத்திரம் என ஆறும்.

## அகப்புறச் சமயம்

1. பாசுபதம் 2. மாவிரதம் 3. காபாலம் 4. வாமம் 5. வைரவம் 6. ஐக்கியவாத சைவமென்று ஆறுவகையாம்,

---

ஆண்மையிலாப் படைகள் அழகிற் கமைவதுபோல்,
வீண்பெருமை யாளர்க்குக், கோலம் விளைவாமே.

**அகச்சமயம் :**

(அ) பாடாணவாத சைவம் முதல் சிவாத்துவித சைவ மீறாகவுள்ள ஆறு என்பர். இவ்வாறல்லாமல் பாடாணவாதத்தையும் பேதவாதத்தினையும் கூட்டி யெண்ணி சுத்த சைவத்தையும் உடன்சேர்த்து அகச்சமயம் ஆறெனக் கூறலும் உண்டு. ஆனுல் " ஏகன், அநேகன், இருள், கருமம், மாயை இரண்டு " என்ற ஆறு பொருளும் கொணட பாடாணவாத முதலிய ஆறே அகசசமயம் என்று திருவருட்பயன் கூறுவது காண்க. இவை ஒவ்வொன்றின் விளக்கமும் வேணடுவோர், சிவப்பிரகாசம், சிவஞானசித்தியார், சுபக்கம், சிவஞானபாடியம் முதலிய சைவ சித்தாந்த நூல்களைக் காண்க. விரிவஞ்சி விடப்பட்டது.

மேலே கூறியவண்ணம் சமயங்கள் நால்வகைப் பிரிவுடையன எனினும், ஒவ்வொன்றும் ஆறு உட்பிரிவு கொண்டது. ஆதலால் இந்த இருபத்துநான்கு சமயங்களையும் ஆறுசமயங்கள் என்று தொகுத்துக் கூறுவர்.

எனவே ஆறு சமயத்திலும் அதிபதியாக இருபபவன் முருகன் ஒருவனே என்ற உண்மையை விளக்குவது என்று கொள்வதே சரியாகும் இந்தவிதமான 24 பிரிவுகொண்ட சமயங்கள் ஆறினுக்கும் தலைவருக்கு வணக்கம் என்பதையே

ஷண்மத பதயே நமோ நம : என்று
குமாரஸ்தவம் கூறித் துதிக்கிறது.

ஆறுசமயத் தலைவன ஆறுமுகனே என்பது,

" ஆறுசமயரும் தத்தமில் ஒவ்வாதிங கலைவது என்னே !
தேறுமறிவினர் எலலாம் அறிந்தும் தெளிந்திலரே
பேறுதரும் தெய்வம் யாவைக்கும் யானபெரும் தேவனென்றே
வீறுமுக்கங் கொணடு போரூர் முருகன விளம்பியதே "

---

உலகுவக்கும் நல்லொழுக்கம் ஓர்ந்தார்க்கே, மும்மைநலம் மலரும், மகிழ்ச்சி மதிபெருகும் திண்ணமிதே.

" ஆறுசமயக் கடவுள் வேறுவே றின்றியான் ஒருவனே
அங்கங்கிருந்து, அன்பர்க்கு முத்திதரு வித்தென்று
யாவர்க்கும் அறிவித்த வதனமணியே "

(சிதம்பர சுவாமிகள்)

" அறுசமய சாத்திரப் பொருளோனே "

(திருப்புகழ்)

" ஆறு சமயத்தி லதிபதி நானென்றும்
கூறு சமயக் குருபரன் நானென்றும்
தேறினர் தேற திருவம் பலத்துள்ளே
வேறின்றி அண்ணல் விளங்கி நின்றனே "

(திருமூலர்)

வாக்குகளைச் சிந்திக்க.

ஓரே ஊருக்கு ஆறுவழிகள் இருப்பது போல, இறைவன் ஒருவனை அடைய ஆறுவகைச் சமயங்கள் ஏற்பட்டன.

" ஒன்றே பேரூர் வழி ஆறு அதற்குள "

(திருமந்திரம்)

வழிகள் ஆறுனாலும் அடையும் ஊர் ஒன்றே ஆதல் உண்மை. ஆறு சமயங்களாயினும் ஆண்டவன் ஒருவனே தலைவன என்பதை விளக்கவே

" ஷண்மதபதயே நமோநம "

என்று பாம்பனடிகள் துதிக்கிறார். கணபதியை வணங்கும் காணபத்தியமும், சிவனாரை இறைஞ்சும் சைவமும், சக்தியை வழிபடும் சாக்தேயமும், விஷ்ணுவைத் துதிக்கும் வைணவமும், சூரியனைத் தொழும் சௌரவமும், குமரனைத தொழும் கௌமார மும் என்ற அறுவகைச் சமயிகட்கும், அவ்வவர் பொருளாய் நிற்கும் தலைவனுக்கு வணக்கம் என்னலும் ஆம். (தொடரும்)

---

கல்லாதும் கேளாதும், கற்றார் சபைநடுவிற்
சொல்லாடு வார்க்கஞ்சித், தூயோர் ஒதுங்குவரே.

# கருதா மறவா நெறி

(கி. வா. ஜ.)

நம்முடைய மனத்துக்குப் பலவகை ஆற்றல்கள் உண்டு. முன்பு நிகழ்ந்ததைப் பதிவாக நினைவில் வைத்துக் கொள்ளும் ஆற்றல் அவற்றில் ஒன்று. இந்த நினைவாற்றல் குழந்தைப் பருவத்தில் அதிகமாக இருப்பதில்லை; நாளடைவில் வளர்கிறது; உடம்பு தளரும் போது இந்த ஆற்றலும் தளர்ச்சி அடைகிறது.

நினைப்புக்கு எதிர்நிலை மறதி. மறதியும் மனிதனுடைய இயல்புகளில் ஒன்று. அவன் நினைக்கிறவற்றைக் காட்டிலும் மறப்பவையே அதிகம். நினைப்பு நல்லதா, மறப்பு நல்லதா என்றால் இரண்டுமே நல்லனவாகும் நிலையும் உண்டு; அல்லாதன வாகும் நிலையும் உண்டு. இறைவனை எப்போதும் நினைப்பது நல்லது. அவனை மறப்பது நன்றன்று. பிறர் செய்த உபகாரத்தை நினைப்பது நன்று; மறப்பது நன்றன்று. பிறர் செய்த தீங்கை மறப்பது நன்று.

"நன்றி மறப்பது நன்றன்று; நன்றல்ல
அன்றே மறப்பது நன்று"

என்பார் திருவள்ளுவர். கல்வி கற்பவர்களுக்குக் கற்ற நூற் கருத்துக்கள் மறவாமல் இருந்தால் நன்று. நாம் பட்ட பழந் துன்பங்களை மறப்பது நன்று.

ஒரு வகையில் மறதி நமக்குப் பெரிய வரமாக உதவும் நிலையும் உண்டு. நாம் பல பிறவிகளை எடுத்திருக்கிறோம். ஒவ்வொரு பிறவியிலும் நாம் பெற்ற இன்ப துன்பங்கள் பலப் பல. புதுப் பிறவி எடுக்கும்போது பழம் பிறவிகளைப் பற்றிய

---

விழிப்பாக நல்லதுசெய் வித்தகரை, என்றும்
பழித்தார், சிலநாளில் அப்பயனைப் பார்ப்பாரே.

நினைவு அத்தனையும் மறைந்து விடுகின்றன. அதுவும் மறப்பு என்றே சொல்ல வேண்டும். அந்த மறைப்பும் மறப்பும் இல்லா விட்டால என்ன ஆகு மென்பதை நினைத்துப் பாருங்கள். இந்த ஒரு பிறவியில் பட்ட துன்பங்களையும் பெற்ற உறவினர் களையும் நினைந்து கவலை யடைகிறோம். இந்தக் கவலையையே நம்மால தாங்க முடியவிலலை. இன்னும் முனனைப் பிறவியின நினைவும் நமககு வநதுவிட்டால் வேறு வினையே வேண்டாம். எதையும் உறுதியாக நினைத்துச செய்யும் ஆற்றலே நம்மிடமிருந்து மறைந்துவிடும். நல்ல வேளையாக இறைவன் போன பிறவிகளில் நிகழ்ந்தவற்றை மறைத்திருக்கிறான. "இல்லையானல்—?

அப்படியானல் நினைப்பு நல்லதல்லவா? பல சமயஙகளில் அது நன்றுதான. ஆனல் பட்டபாட்டை எபபோதும் நினைத துக் கொண்டிருந்தால் மேலே எபபடி முயற்சி செய்ய முடியும்?

நினைபபு, மறப்பு என்னும் இரண்டும் மனதில உளள ஒருவகை ஆற்றலின இருவேறு பக்கஙகள். நினைபபு இருந தால் மறப்பும் இருக்கும். விழிபபு, தூக்கம எனனும் இரண் டும் எப்படித தொடர்புடையனவோ, அவ்வாறே நினைபபும் மறப்பும் தொடர்புடையன. மனம் இயங்கினல்தான நினைபபு உண்டாகும். மறதி எனபது மனம் இயங்கும்போது நினைவு வாராமல் தயங்கும் நிலை.

மனமே இயஙகாமல் போனல் நினைப்பும் இல்லை; மறபபும் இல்லை. அபபோது மறபபுத்தானே இருககிறது என்று தோனறும். மறபபு என்பது நினைபபு இலலாமையைக் குறிப பதே யன்றி, மனம் இயஙகாமல இருப்பதைக குறிபபதன்று.

ஒளியும் நிழலும் என்று சொலலுகிறோம். ஒளியிருந்தால் நிழலும் இருக்கிறது. எஙகும் இருள் பரந்த இரவில் எங்கும்

வனனெஞ்சர் பினனே வழிதவறிச் செல்லாதே
என்னெஞ்சே! என்றும் இழிவுவரும் செய்தியிதே.

நிழல் இருக்கிறது என்று சொல்லலாமா? அப்படிச் சொல்வதில்லை. நிழல் வேறு இருள் வேறு. அப்படித்தான் மறதி வேறு, மனம் இயங்காமல் நிற்கும் நிலை வேறு. ஒருசார் பொருள்களின் நினைவு நிகழும்போது மற்றவற்றின் நினைவு வாராமல் இருக்கிறது, நிகழ்வது நினைப்பு. வாராமை மறதி.

மனம் இல்லையானாலும் இயக்க மொழிந்தாலும் நினைப்பும் மறபபும் இருப்பதில்லை. நன்ருகத் தூங்குகினருன; ஒருவன் மயககம் போடடு விழுந்துவிடுகிருன். இருவருக்கும் மனம் இயங்குவதில்லை; ஆகவே நினைப்பும் மறப்பும் அவர்களுக்கு இல்லை. ஆனல அவர்கள இருளில் இருக்கிருர்கள். இருட்டிலே நிழலும் இராது; ஒளியும் இராது.

விழிபபு நிலையிலே நினைப்பு மினறி மறப்பு மின்றி இருக்கும் அநுபவம் ஒனறு உண்டு. அது மன இயக்கம் அழிந்தவர்களிடம உண்டாவது. அங்கே நினைப்பும் இலலை; மறப்பும் இலலை. இனபம் துன்பம் எனற அநுபவமும் இல்லை. புண்ணியம் பாவம், பகல் இரவு, செயல் ஓய்வு எனறுள்ள இரடடைகள் பல அநத நிலையில் இலலை. அத்தகைய நிலை தான் சீவனமுததி நிலை

இந்த நிலைக்குச் செலலும் வழியை நாம் தேர்நது தெளிய வேண்டும. மனததை அடககி இறைவன திருவருள் எண்ணத்திலே கரையச செய்யவேண்டும். மெல்ல மெல்ல மனம் தன் ஆற்றலை இழநது அழிந்துவிடும். அப்போது அதன் இயக்கங்களாகிய யாவும போய்விடும். கருதுவதும் மறபபதும் இல்லையாகும். இந்த நெறியே இறைவன் அருளநுபவம் பெற்று நிற்கும் நெறி. "இதனை அடியேன பெறவேண்டும்" எனறு ஆசைப்படுகிருர் அருணகிரியார்.

---

இலலாததை யெண்ணி ஏங்கிமனம் சாகாமல,
நல்லறத்தைச் செய்து நலனடைதி என்மனனே.

அதற்கு வழி என்ன? நினைப்பும் மறப்பும் மனத்தை அலைக்க வாழும் நமக்கு, அவற்றினூடே இருந்தபடியே அவற்றைப் போக்கிக் கொள்ள முடியாது. அந்த இரண்டுக்கும் அப்பால் உள்ள ஒருபொருள் நம்மை இழுத்துக் கொள்ள வேண்டும். அந்தப் பொருளே பரம்பொருள்; முருகன். அவன் அருளாலதான் இந்த இரண்டு சிறைகளையும் தாணடிச் செல்லலாம்.

ஆதலின், "நினைப்பும் மறப்பும் ஒழிந்த நெறியை நான் அநுபவததில் அடைய நீ உன இரண்டு தாளாகிய தாமரையைத் தந்தருள வேண்டும். அவற்றைத் தர எனறைக்கு நாள் பார்த்திருக்கிறாய் முருகா! எனறு கேட்கிறார் அருணகிரியார்.

கருதா மறவா நெறிகா ணஎனக்கு
இருதாள் வனசம் தரஎன் றிசைவாய்?

(தொடரும்.)

---

தேவிதாஸர்கள் 29

## நிமி மன்னர் நிலை

(ரஸபதி)

எழுமையினும் சிறபபுடையது ஏழு நகர். அவைகளுள் ஒன்று அயோத்தி. இனிய அப்பதியை ஆண்டவன் இட்சுவாகு. நியதியுடைய அவன வழியிற் பிறந்தவன நிமி.

மின்னும் மேனி, நற்குண நற்செயல், நல்லற ஞானம் கண்ட அருமை நிமியின ஆட்சியில, குடிகள் யாவரும் குதூகலம் எய்தினர். நாட்டிற்கு அவன் செய்த நலம் பல. கடுந் தவ முனிவா பலர் காட்டில் உளர். புரஞ்ஜயன் எனும் தன் புதல்வனை, அவாகட்குச் சேவை செய்க எனறு நிமி அர்ப்ப

---

வழஙகார், இழிந்தார் வாழ்செலவர் ஆதல்,
புழங்குகின்ற முன்னைய புண்யமெனும் நன்னூலே.

ணித்தான். வனத்தவரும் நாட்டவரும், இது கண்டு அவனை வாழ்த்தினர்.

இயற்கையாகவே நிமி, இறைவி வழிபாட்டில் இருப்பவன். தேவதேவயின திருமந்திரம், ஓயாது அவன் நாவில் உருவேறும். சிறந்த தேவிகிதை, அவன சிந்தையில் இருந்தவை.

விமலைக்குப் பிரீதியானது ஒரு வேள்வி. அதைச செய்ய விரும்பியது அவன் மனம். வாயமை இட்சுவாகுவை வணங்கினான். அரிய தன கருத்தை அறிவிததான். கேண்மையுடன் அனுமதி கிடைத்தது.

தூய அவ் வேளவிக்கு உரியவைகளைத் தொகுத்தான. பிருகு, ஆங்கீரசர், வாமதேவர், கௌதமர், வசிட்டர், புலததியர், ரிசிகர், புலஹர் முதலியோர்களை, அதற்கென்றே வரவழைத்தான். அருமையாக வழிபட்டான். அவர்கள் ஆசியும் பெற்றான. வசிட்டரைத் தனிதது அழைததான. அவரிடம் கனிந்த விநயம் காட்டினான.

ஸ்வாமின ! யாமளை விரும்பும் யாகம் செய்ய நினைத்தேன். அதற்கு ஆவன தொகுததேன. குலகுருவான தேவரீர், அதை நலம்பெற முனனிருநது நடத்திக் கொடும் என்று, விநய பூர்வமாக விண்ணபபித்தான்.

ஓஹோ ! அப்படியா செய்தி. நிமீ! இரண்டு நாட்கு முன், இபபடியே கேட்டான் இநதிரன். ஊக்கிய நோக்கம் உணர்ந்தேன. வருவதாக வாக்களித்தேன். முதலில் அவன் வேள்வி முடியட்டும் ! அதன்பின் நீ ஆரம்பிக்கலாம். நானே முன்னிருந்து நடத்திக் கொடுக்கிறேன.

ஸ்வாமி ! வேள்வியை நடதத பல முனிவர்களை வரவழைதது விட்டேன. எல்லாப் பொருளும் சித்தமாயுள. தாங்கள் இருக்கும் தைரியததால, இச்செயலில துணிநது இறங்கினேன. பாழும் காலம் பயஙகரமானது. எந்த நேரத்தில்

---

மரம்போல வலிய மனத்தார்முன் னின்று
இரந்தார் துறநதார்முன் யாசித்தார் போல்வாரே.

எது நிகழும் என்று எவர் அறிய இயலும்? இந்திர வேள்வி நிறைவு பெறும்வரை, நான் இருப்பது என்பது என்ன நிச்சயம்? நன்றே செய்க! அதை இன்றே செய்க! நினைவு பிறந்த அப்போதே செய்க என்று, எத்தனையோதரம் போதித்து இருக்கிறீர்கள்!

நிமி! இது குறித்து ஆரம்பத்திலேயே எனக்கு அறிவித்திருக்க வேண்டும்! திடீரென்று இப்போது தெரிவிக்கிறாய். உன் நோக்கு உனக்கு; என் வாக்கை நான் காக்க வேண்டாவா? உன் எண்ணத்தை, இப்போது என்னால் நிறைவேற்ற இயலாது; வருகிறேன் என்று, விரைந்து வசிட்டர் வெளியேறினார்.

பார்த்திபன் மனம் படபடத்தது. என்ன செய்வது? தெரியவில்லையே! இங்கிருக்கும் முனிவர்கட்கு என்ன பதில் சொல்வது? வசிட்டர் இல்லை என்று, தற்பரி வேள்வி தடைப்படுவதா! வந்திருக்கும் முனிவர்களைக் கொண்டு, அதை நிறைவேற்றி விடலாம் என்று உறுதி யடைந்தது நிமி உள்ளம்.

இமயச் சாரல். கடற்கரை ஓரம். அந்த இடம்பார்த்து, சாலை யமைத்தான். அரிய சடங்குகள் ஆரம்பம் ஆயின. சிறந்த தானம் பல செய்தான். சால்புடைய வேள்விக்கு உரிய சங்கற்பங்கள் நிகழ்ந்தன. நலமான அவ்வேள்வி, பல நாளாக நடைபெற்று வந்தது.

திடீரென்று ஒரே சலசலப்பு. குறுகுறு பேச்சு எங்கும் குமுறியது. காரணம் என்ன?

தேவலோகம் சென்ற வசிட்டர், இந்திர வேள்வியை இனிது நடத்தி, நிமியிருக்கும் இடம் நோக்கி வருகிறார். அவரது வருகை, பலர்க்கும் அச்சம் அளித்தது. இதனால்தான், வேள்விக்களம் ஒரே கலகலப்பா யிருக்கிறது.

---

மழைபோலும் ஈகையினர், வந்தென்றும் காப்பர்;
பழம்பகையோ, நட்டுப் பழிதீர்த்துக் கொள்ளுமரோ.

தூய வேள்வியைப் பலநாள் தொடர்ந்து செய்ததால், அயர்ச்சி பெரிதும் அதிகரித்தது. அதனால் நிமி, தனனை மறந்தான். மெய்மறந்து உறங்கினான்.

வசிட்டர் வருகையை, அணமியிருந்த பலர் அறிவித்தனர். உறக்க கலக்கத்தில நிமி, அதை உணர்ந்திலன். எழுப்பு பவரை, அட சீ, சும்மா இருங்கள் என்று மறுத்தான்.

இச்சமயத்தை ஒரு கருவியாக் கொண்ட விதி, விபரீத நினைவுகளை எழுப்பி விளையாட ஆரம்பித்தது.

தட்டி எழுப்புவாரையும், மறுககும் மனனனையும், வசிட்டர் மாறி மாறிப் பார்ததார். பயமில்லை, இவனுககு நம்மிடம் பக்தியும் இல்லை என்று, தவறாக நினைத்தார்.

நம்மை மறந்தான. நாம் இல்லாத சமயத்தில், துணிந்து வேள்வியைத் துவக்கினான. அறிவிப்பார் நம் வருகையை அறிவித்தும், சிறநத அவர்களைச் சீறுகிறான். இவ்வளவு ஆணவம் இவனுக்கு எப்படி வந்தது? என்று, ஏறி யிறங்கி எரிந்தது மனம்.

வீணன் இவன் தேகம் வீழட்டும்: இனி வேறு உடல் இல்லாமல் போகட்டும் என்று, வீரிட்டுக் கூவினார் வசிட்டர்.

அதே சமயம், உறங்கியிருந்த நிமியின உடலம் எரிந்தது. பதைத்துத் துடித்த பார்ததிபன ஆன்மா, நுண்மை உடலில் நுழைந்தது. இதை அறிந்த அனைவரும், ஐயோ! இது எனன விபரீதம் என்று அலறினர்.

சூக்கும தேகத்துள் புகுந்த நிமி, விவரம் அறிந்தான். வசிட்டரைப் பார்த்தான. ஆததிரம் பெரிதும் அதிகரித்தது.

வசிட்டரே! நீர் என குலகுரு. சொலலிக் கொளளலாம் எனறு நினைத்தேன. முன்கூட்டிச் சொல்லவில்லை என்பது பிழைதான. ஆரம்பித்து விட்டேன். தக்கவர்களைத் தருவிததாயிற்று. குலகுரு இல்லை; பிறகு ஆரம்பிக்கலாம்; இபபோது

---

குடும்ப ரகசியத்தைத் தூர்ததர்முன் கூறில
கடும்பறைபோல, எங்கும் கழறித் திரிவாரே.

போய், வசிட்டர் வந்தபின் வாருங்கள் என்று எப்படிச் சொல்வது? குல குருவான நீரே பொறுக்கவில்லை யானால், மற்ற முனிவர்கள் மட்டும் என்னை மன்னிப்பரா?

அயர்ந்தேன். என்னையே மறந்தேன். உறங்கி யிருந்தேனா. ஊன்றி இதைச சிறிது உணர வேண்டாமா? புனித வேள்வி இன்னும் பூர்த்தியாகவில்லை! இதற்குள் சபித்துவிட்டீரே!

தருமத்தின சூட்சுமத்தை அறிந்தவரா நீர்? ஓதி உணர்ந்தும் பேதை யாயினீர்! கோபம் சண்டாளம் என்பதை அறியாத நீரா முககாலம் உணர்ந்த முனிவர்? என்னைச் சபித்ததால் நீர் அடைந்த பயன் யாது? உம் பிழையை நீர் உணரவே இல்லையே! எரிகிறதே என் வயிறு! வசிட்டரே! உம் உடலும் ஒழிவதாக! நான் அடையும் வேதனையை நீரும் அடைக என்று, மாதவ வசிட்டரை நிமி, மனநொந்து சபித்தான்.

பராசக்தி பக்தனுை அவனது பயங்கர சாபம், அப்போதே வசிட்டரை அலைக்கழித்தது. எரிந்து அவர் மேனி கரிந்தது. பூத உடலில இருந்து புறப்பட்ட அவர் உயிர், நுண்ணுடலில் நுழைநது நுடங்கியது. அவ்வுடலில் புகுந்த வசிட்டர், தன் தவறை நினைத்துத் தடுமாறினர்.

இராகத்வேஷம் எவரையும் விடுவது இல்லை. சர்வ சங்க பரித்யாகம் எனும் பெயரால, விரிவான புறப்பொருள்களை விட்டு விடலாம்; அகத்துள காமக் குரோதாதிகளை அகற்றுவது, அவ்வளவு சுலபம் அல்ல. காமம், குரோதம், லோபம், அகங்காரம் நானகையும் வெனறவரே ஞான வீரர்கள். அவர்களே வீடுபேற்றிற்கு உரியவர்கள். ஞான முனிவரா யிருந்தும் வசிட்டர், குல மன னர்கட்குக் குருவா யிருநது, அவாகளொடு பழகிய சார்பால, க்ஷாத்ர புததி இடையிடை வந்து, சங்கடங்கள் விளைநத சந்தர்பபம் பல. அவ்வரலாறுகளுள இது ஒன்று.

---

பனியால் குளம்நிரம்பாப பானமைபோல, துனபம
இனிய உபசாரச சொற்களால தீராதே.

வருந்திய வசிட்டர், சத்ய லோகத்தைச் சார்ந்தார். பிரம தேவரிடம் சரண் புகுந்தார்.

தந்தையே! அரிய தவம் செய்த என் தேகம் அழிந்தது. பூவுலகர் கண்கட்குப் புலனுகாமல், நுண் உடலில் இருக்கும் என் பரிபவத்தைப் பாரும்! இனி என் கதி என்ன ஆவது? இனி எனக்கு வேறு உடல் தரும் தந்தை எவர்? வேறு உடல் வருவதாயின், இப்போதைய ஞானம் இருக்குமா? அந்தோ பிரபு! என்று அலறி வசிட்டர் அழுதார்.

புத்ரா! புத்திசாலிகள் போக்கிற்கு உன் வரலாறு ஒரு உதாரணம். நல்லது செய்வதாக நாடகம். உண்மையில் பாவமே அவர்கட்குக் கிடைக்கும் பரிசு. அந்தராத்மாவின இயற்கை அறிவிப்பை, அடியொடு மறுப்பவர் அறிவாளிகள். மனம் போன போக்கில், பேசசும் செயலும் அவர்களிடம் பெருகு கிறது. உணர்வால் எழும் ஒளி, உள்ளத்தில் உதயம் ஆக வில்லேயேல், அவர்களால அவர்களுக்கே நஷ்டம். மற்றவர்கட் கும் மனவேதனைதான.

அகில உலகையும் அளிக்கும் ஜகதாம்பிகையை, எண்ணி இரு! ஏததித் தொழு. நிமலேதான் நின் கவலையை நீக்கத் தக்கவள். போ! ஒவ்வொரு விநாடியையும் விரையம் செய் யாதே என்று, யோகமுகம் ஆயினர் பிரமதேவர்.

வருந்திய வசிட்டர், அங்கிருநது அகன்ருர். புனித ஒரு வனத்துள் புகுந்தார். பத்மாசனம் இட்டார். பராபரையை நினைந்தார். தன்னை மறந்தார். தியானத்தில் ஆழ்ந்தார். இடையில் ஆறு ஆண்டுகள் உருண்டு ஓடின.

* * * *

கலகல நகை ஒலி எழுந்தது. வசிட்டர் கண்களைத் திறந் தார். என்ன வியப்பு! பரவிய உலகமெலாம் பசுமை மயம்.

---

பனங்கொட்டை ஊன்றிப் பழமுண்பார் யாரே?
தினையாம் பயனெனினும், அண்மைவரில் தேர்வாமே.

அதன் நடுவில் கோமளையான தேவியின் கோலம், புறக்கண்கட்குப் புலனுயது.

அம்பா! அம்பிகே! என்னே என் கதி என்று, கண்ணீரைக் காணிக்கை யாக்கிக் கதறினர்.

வசிஷ்டா! பரம ஞானம் புலித்தவன, மித்திரா வருணன். கனிவு மிக்க அவன் உடலில் கலந்து இரு! ஊறுகாய் பாததிரத்தில் ஊறுவதுபோல், அவன் உடலில உள்ள அருள் ஞானத்தில் ஊறி ஊறி, அயோநிஜனுக உதயம் செய் என்ருள். விண் வடிவான விமலதேவி, பளிச் பளிச்செனறு மின்னியது வானம். அவ்வொளியில், கலந்து கரந்தது தேவி திருவுரு.

கை குவித்தார் வசிட்டார். எழுந்தார். மிதரா வருணர் தவம் செய்யும் இடத்தை யடைந்தார். தனது சூக்கும தேகத்துடன், புனித அவர் உடலுள் புகுந்தார். பல நாள்'இருந்தார்.

இறைவி திருவருள் இயக்கத்தால், மித்திரா வருணர் ஒரு நாள் கண் திறந்தார். அவர் எதிரில் இருந்தாள் ஊர்வசி; அவளைக் கண்டு மயங்கியது அவா மனம்.

ஓ! ஏன் இநத மயக்கம்? உடலில் ஊறிய உயிர்களின் ஊக்குதல்தான எனறு உணாந்து வருந்தியது உள்ளம். உடனே தேற்றித் தன உள்ளததைத் தெளிவாககினர். ஊறித் தன்னுள் இருநத ஜீவசக்திகளை, எதிரில் இருந்த கும்பத்தில் இறக்கினர்.

தேவி திருவருளாலும், மிததிரா வருணரது அரிய சங்கற்ப ஆற்றலாலும், கும்பத்தில் இருந்து, அகத்திய முனிவர் வெளியானர். அடுத்து எழுந்தது, விசிட்ட வசிட்டர் திருவுருவம். அரிய திருவருள் ரகசியத்தை, அறிய வல்லவர் எவர் உளர்.

சூரனும் பதுமனும், சூரபதுமன என ஓர் உடலில் இருந்தனர்; ஐம்மான முருகன், அவ்விருவரையும் வேறு பிரிதது, சேவலும் மயிலுமாகச செய்தனன். அதுபோல் வசிட்ட ஜீவ சக்தியும், அதற்கு முனனேயே வேருெரு ஜீவ சத்தியும்.

---

பனைமரமேல் புஞ்சுவைத்தால், எஙகும பறநதுவிடும;
இனிய ரகசியம், கீழ எல்லவர்க்கும் கூறிடுமே.

மித்திரா வருணர் மேனியில் மிதந்து இருந்தன. உடம்பில் தங்கிய உயிர்களின் ஊக்குதல்தான், காம வெப்பத்தை உடலில் கனல்விக்கின்றன. அருள ஞான மேதையான மித்திரா வருணர், அநத ரகசியத்தை அறிந்தவர். இந்த இரு உயிர்களையும், பெணகளில் தங்கவைத்துப் பிறபபிக்காமல், உத்தம கலசததுள உறைய வைதது, அயோநிஜர் எனும்படி ஆக்கை அளித்தார்.

சீவனில சிவம், வேறுபட்டுத் தோன்றுவது இல்லை. அது போல் ஓர்உடலுள ஈருயிர, வேறு வேருய விளங்கியது இலலை. ஒனருகியும், வேருகியும, ஒன்றும் வேறுமான உடலுகியும் இருக்கும் அதவைதச் செய்திக்கு, இதைவிடவா வேறு உதா ரணம் வேண்டும்! பிற்காலத்தில, வடநாட்டிற்கு வாழ்வளித்தார் வசிட்டர். தெனஞட்டின அறிவைத தெளிய வைததார் அகத்தியர்.

* * * * *

எனன இருநதாலும் அவர் குல குரு. சரியோ தவரு அவர் எனனைச சபிககலாம். அவரைத் திருப்பிச சபிக்க, எனக்கு உரிமை ஏது? எவ்வளவு தவருன காரியம் செய்தேன்? என்று, சூக்கும உடலில இருக்கும் நிமி, தாபம் மிகுந்து தவிக் கல் ஆயினன.

வேள்வியை நிகழ்த்தி வைக்க வந்த ரித்விக்குகள், நிகழ்ந்த வைகளை நினைந்தனர். நிகழ்த்திய வேள்வியும் நிறைவு பெற வில்லை. சால்பற்ற இப்பாபம், நம்மையும் சாருமே என்று, எண்ணி மனம் கணணினர்.

காவலனை, மந்திர சக்தியால் காக்கத் துணிந்தனர். அதற் கான மந்திரங்களை, ஒவ்வொருவரும் ஓயாது உருவேற்றல் ஆயினர். அதன் பயனுக, இரண்டொரு நாளில், சூக்கும

---

பலபேர் எதிர்ககப் பதுங்குகின்ற வேந்தர்,
பலபடைகள் சேர்த்துப் பகையழித்தல் கண்டாமே.

தேக நிமியின் சுவாசம் தெரிந்தது. அதன் மூலம், அவன் நிற்கும் இடத்தை அறிந்தனர். மாபெரும் பாவனையால், அவனுக்கு மாலை சூட்டினர். அச சூக்கும தேகத்தை அண்மையில் அழைத்து, நியதியாக வேள்வியை நிறைவு செய்தனர்.

அவ்வமயம், வானவர் அங்கு வந்தனர். அவர்களிடம் ரித்விக்குகள், நிமியின் செய்தியை விண்ணபபித்தனர்.

நுண்ணுடல் விண்ணவர், நுண்மை யுடலில் உள்ள நிமியை நோக்கினர்,

நிமிச் சக்ரவாத்தி! பேரருள வேள்விபால் தேவிக்குப் பிரீதி செயதனை. மானுட உடலில் மருவ வேண்டுமா? அலலது தேவ உடலைத தேர்கிறயா? எது வேண்டும்? கேள்! தடைப் படாமல் விரும்பும் தேகத்தைத தருகிறேம்! எனறு கூறினர் இமையவர்.

பொனனுலகப புனிதர்களே! நாசம் அடையும் மானுடத்தில் எனக்கு நாட்டம் இல்லை. போகமே எண்ணிப் பொஙகும் தேவ தேகத்திலும் எனக்கு விருபபம் இலலை. என்குல குருவான வசிட்டர், எநதத தேகமும இனி உனக்கு இராது என்று சபிததுளர். புனித அவர் சொறகள் பொய்த்திடாது. தேவ தேவி திருவருளே தேவை. அந்த ஒனறையே ஆவலிககிறது அடியேன மனம் எனருள், நுணணுடலில உள்ள நிமி.

பேஷ, நல்ல யோசனை. நிமீ! மஙகல வடிவியை மனனம் செய்! ஆநந்த வடிவி, பேருன வாழ்வு பெருக வைப்பள். வருகிறேம் எனறு, வானவர் விண்ணில மறைந்தனர்.

நிமி, தூய மொழிகளால், சிவையைத் தொடர்ந்து துதிக்கலாயினன. கல்லையும உருக்கும் கனிவு, இனிய அவன் பிரார்த்தனையில் இருந்தது.

---

வாய்திறந்தால், கற்ருர்முன் மானம் அழிந்துவிடும்;
ஆய்கலைகள் கற்ருல், அறிவுவளம் வந்துறுமே.

ஒருநாள், கோடி சூரிய ஒளி காட்டி, கோமளே தரிசனம் ஆயினள். தன் வசம் கெட்டுப் பரவசப் பட்ட தரணிபன், கூப்பிய கைகளுடன் கும்பிட்டான்.

அம்பா அபயம்! அடியர்க்கு எளியாய் அபயம் அபயம்! சிவனுர் தேவி! அபயம் அபயம் என்று அலறினன்.

நிமீ! இனி உனக்கு எப்பிறப்பும் வேண்டா! உயிர்களின் கண்களில் உறவு கொள்! நிமையில் உனது ஆட்சி என்றும் நிகழ்வுறும். நிமையில் இருக்கும் அதனுல், இனறு முதல் நிமி எனறே பெயரே உன்னில் நிலைபதாக! என்று, உரைத்த தேவியின் கம்பீர திருவுருவம் கரந்தது. வாமை தந்த வரத்தின் படி, ஆனமாக்களின் கண்ணிமையில், நிமி காலூன்றித் தங்கினன.

புவனேஸ்வரீ! வணக்கம்; கோமளாம்பிகே நமஸ்காரம் என்று, கொட்டு கொட்டு என்று இமை கொட்டி, குவலய வடிவியை நிமி என்றும் கும்பிட்டுக் கொண்டே இருக் கினருன. அதன மூலம், ஆகாமிய வினைகள் உயிர்கட்கு அதி கரிக்காதபடி, மட்டுப்படுத்தி அதனுல் மகிழ்கினருன்.

நிமியின நிலையை உணர்ந்த முனிவாகள், என்ன அற்புத மான அனுபவம் எனறு மகிழ்ந்தனா. புணணிய நிமியின சரித் திரம், இதனுடன பொானறி விடுவது கூடாது எனறு, அதனில் புந்தி செலுததினர்.

அவனது தூல தேகத்திற்கு உரிய சம்ஸ்காரங்களைச் செய்தனா. அதே இடததில் அரணிக் கட்டையை நட்டனர். மகப்பேற்று மந்திரம் ஓதி, இடையருது கடைந்தனர்,

ஒருநாள, அதனில் இருநது உத்தமமான புனித ஒரு புதல்வன் உதித்தான. கடைதலுக்கு வேறு ஒரு பெயா மிதி. மிதியி லிருந்து பிறந்தவன, மிதி என்று பெயர் பெற்ருன்,

---

ஓம்பும் அறிஞரை, ஊனறிநோக் கில்தெரிவர்.
பாம்பின்கால் பாம்பறியும் எனபர் பழமொழியே.

ஜனக நிமித்தம் உதித்த அம்மைந்தனை, ஜனகன் எனறும் முனிவர்கள் பெயரிட்டு அழைத்தனர்.

நிமிக்குத் தேகம் இல்லாது போனதால், ஜனகன் ஆதியான அவன காலவழியர், விதேகர் என்று எண்ணப் பெற்றனர். மிதி அமைத்த நகர்தான மிதிலாபுரி.

மிதிலாபுரி வாசிகள், தேவிதாஸர்களாகி, என்றும் அம்பிகையை ஆராதிதது வந்தனர். அதன் பயனுக, பரம ஞானவான்கள் ஆயினா. அந்த அருமையை உணர்ந்த திருமகள், ஜானகியாகி அங்குத் தங்கினள். உருத்திர தனுசும், ஜனகர் காலம்வரை. அனைவரும் ஆராதிக்கும்படி அவரிடமே இருந்தது.

வாழ்க தேவிதாசர்கள்!

ஓம்.

---

## "கடவுள்" — சச்சிதாநந்தன்

(இலந்தைபடிக் கௌணிய வித்துவான்
இராஜ சிவ. சாம்பசிவ சர்மா.)

புற விருளைப் போக்குவது விளக்கு. அது பிற பொருள்களை விளககிக் காட்டுதலினுல் விளககு என்னும் பெயரைப் பெற்றது. அது சிறிதளவு தூரததிலுளள பொருளைத்தான் விளக்கும். சிறிதளவு தூரத்திலுள்ள இருளைத்தான் போக்கும். இககாலததிலுளள மினவிளக்குகளும் ஓரளவுக்கே இருளைப் போககவலலன. உலகில் நிறைந்துளள இருளைப போக்க வல்லன சூரியனும் சந்திரனுமேயாம். பகலில சூரியனும் இரவில் சந்திரனும் உலகிலுள்ள பரந்த பேரிருளைப போக்குகின்றன. ஒனறேயான சூரியனும், ஒன்றேயான சந்திரனும் உலக

---

தன்னுல் முடிவதனைத், தானுசெய்தல தககமுறை;
பன்னுளும் அன்னுர்சீர் பல்கிப பரவுமரோ.

இருளைப் போக்குகிருர்கள் எனில் அவற்றின் சிறப்பைக் கூற வும் வேண்டுமோ ?

மனிதன் ஒளியுடையவனுகக் காணப்படுதற்கு அவனு டைய கண்களே காரணமாகும். மனிதனுடைய கண்கள் புற ஒளியின் துணைகொண்டுதான் உலகில் பிற பொருள்களைக் காண்பதற்கு உதவுகின்றன. சூரியன, சந்திரன், விளக்கு என்பவையான தூண்டுகோலாகும் ஒளியைக் கொண்டு தான் மனிதன கண்கள் காணும் திறன் பெறுகின்றன. கண் களினல் இருளிலுள்ள பொருள்களை இருளைப போழ்ந்து காண வியலா. விளக்குகளின் ஒளியோ திரியும் நெய்யும் உள்ள வளவேதான உண்டு. அவை குன்றின, ஒளியும் குன்றும்.

மககளுககு அககக்ண் அலலது மனககண என்பது உண்டு. அதனை அறிவுக்கண, ஞானககண என்றும் கூறுவர். புறக்கண் மூடியிருக்கவும் அகக்கண்ணுல் மிக்க தூரத்திலுள்ளவற்றையும் கண்டறிந்து, புறககண்ணுல் பார்த் தாற்போல கூறுநதிறம் மனிதனுக்கு உண்டு. அநத அகக் கண்ணிற்குத் தூண்டுகோலாய ஒளியூட்டும் ஒளி ஒன்று உண்டு. அந்த ஒளி யாது ? உள்ளத்தை மயககும் மாய இரு ளான ஆணவத்தை அமுக்கும் ஒளி. அது இறைவன் திரு வருளான ஞான ஒளி. அருளால் பெறும் ஞான ஒளியைக் கொண்ட விளக்குதான் அகக கண்ணிற்கு ஒளியைத தருகின றது. சாதாரண விளககுகள காற்று, மழையினுலும், நெய் யின்மை, திரியின்மை, மின்சாரமின்மை எனபவற்ருலும் அவிந்துவிடும்; ஒளிகுனறும். எதனுலும் தீஙகுருததாய் அவியாத தாய் வளர்வதாகிய ஞான ஒளியைத் தரும் விளக்குதான் இறை வன். விளக்கு முதலாயவற்றின ஒளியைக் கண்களைத் திறந் தால்தான் உணரலாம். ஆனுல், அகக்கண ஒளி நனி துலங் கும். ஆதலால் இறைவனை ''ஒளிவளர் விளக்கே'' என்று

---

காலத்தில் பாலைக் கறப்பார்போல், நாம்முயலின்
காலத்தில் தானெதுவும், கைவருதல் கண்டாமே.

கூறலாம். 'உள்ளத்துள் ஒளிர்கின்ற ஒளி' என்றார் மணி வாசகப் பெருமான்.

உலகமும் உலகத்திலுள்ள பொருள்களும் ஒருவனால் தோற்றுவிக்கப்பட்டன, கட்டுவோனின்றி வீடில்லை அல்லவா? தோற்றமுண்டானால் அழிவுண்டு என்பது நியதியல்லவா? தோற்றமுற்று அழியாத பொருள் யாதேனும் ஒன்று உலகிலுண்டோ? தோற்றம் இல்லாதது எதுவோ அதுவே அழிவும் இல்லாதது. ஆனால் தோற்றம் இல்லையேல் அத்தகைய ஒன்று உள்ளது என்று எங்ஙனம் உணர்தல் கூடும்? தோற்றம் இல்லையேல் அத்தகைய ஒன்றிற்கு வடிவேது? வடிவின்றி எப்படிக் காணுதல் கூடும்? எனவே, தோற்றமில்லாத ஒன்று, அழிவிலலாத ஒன்று வடிவில்லாத ஒன்று உளது எனறால் அது எது? அதற்கு நிறம், குணம், தன்மை முதலியன இல்லை. அப பொருள்தான் எங்குமாய் யாவுமாம் நீக்கமற நிறைந்துள்ள இறைவன. எவை அழியினும் அவன அழியான. அவன உவப்பிலாதான. ஆதலால அவன் 'உவப்பிலா ஒன்றே' என்று கூறத்தக்கவன.

உயிருள்ள பொருள்களுக்கெல்லாம் உணர்ச்சி என்பது உண்டு. உணர்வு அல்லது உணர்சசி எனபதைச சீவகளை என்பர். உணர்வு அல்லது உணர்சசி என்பதின்றேல் சீவன் இல்லையென்றே கொள்வர். உணர்வு என்பது அறிவினைச சார்த்தியும் உணர்சசி எனபது உடலினைச் சார்ததியும் வழங்கப பெறுஞ் சொற்கள். அநத உணர்வு அலலது உணர்ச்சியை இருவகைப்படுத்தினர் ஆனறோர். அவை பரிச உணர்சசி, மனவுணர்ச்சி எனபன. இவ்விரண்டில் சிறந்தது மன வுணர்சசி. மனவுணர்சசி மனிதனல்லாத உயிாப் பிராணிகளிடத்தும் உண்டு. விலஙகுகளின மனவுணர்சசி கூர்நது விளங்குவதிலலை. ஆதியில் இருந்தபடியே இனறும் உள்ளது.

---

பொருந்தாப பழியெனனும் பொல்லாத நோய்க்கு,
மருந்தாகும் நல்லொழுககம், மாந்தரறி உண்மையிதே.

மனிதனின் மனவுணர்ச்சி காலத்துக்குக் காலம் கூர்ந்து விளங்கு கிறது. அதனால் மனவுணர்ச்சியில் மிகச் சிறந்தவன் மனிதன். விலங்கினங்களுக்கு நினைப்பும் மறப்பும் இல்லை. மனிதனுக்கு அவை உண்டு. மனிதன் தன் மனவுணர்ச்சியினால் இறைவனை அறிய முயல்கின்றான். சிறந்த மனவுணர்ச்சியுடைய மனிதன் ஆற்றலுக்கும் அப்பாற்பட்டு, 'இவ்வளவுதான் தன்மையுடையவன் இறைவன்' என்று சொல்லிக் காட்டவும், நினைத்துப் பார்க்கவும் முடியாதபடி பழமைக்குப் பழமையாக வும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ளான் இறைவன் ஆத லின், அவன் 'உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வு' எனில் அதில் தவறொன்றுமில்லை.

பளிங்கு என்பது கண்ணாடி. கண்ணாடிக்கு இயல்பான நிறம் வெண்மை. தூய்மைக்கு நிறம் வெண்மை. கண்ணா டிக்குப் பிற நிறங்கள் ஊட்டப்படலால் அவ்வந்நிறக் கண்ணாடி களாகச் செய்துகொள்ளலாம். பளிங்கு மாசு மறு அற்றது; தெளிவுறக் காட்டவல்லது; அழகுடையது. அத்தகைய பளிங்குத் திரட்சியாய் குன்றுபோல் நின்றால் அது கண்கொள் ளாக் கவினுறு காட்சியே யாகுமன்றோ! அக் குன்று உறுதி யும் வலிமையும் பெற்றதும் ஆகும். இறைவன் மாசு மறுவற்ற வன்; தூய்மை நிறைந்தவன்; தெளிவுற விளக்கும் இயல்பி னன்; வரம்பிலா இன்பமுடையவன்; எல்லை கூறவொண்ணாத அழகன். அளக்கலாகா அளவும், துளக்கலாகாத் தோற்றமு முடைய குன்று போன்றவன். அவனைத் 'தெளிவார் பளிங்கின் திரண்மணிக்குன்றே' என்று கூறின அவ்வுரை உண்மையே யாகும். பளிங்கிற்குப் பன்னிறம் ஊட்டினால் பன்னிறப் பளிங்குகள் ஆமாறுபோல, ஆண்டவனும் அவரவர் தத்தம் கருத்திற்கேற்பக் கூறுமாறு பல்வேறு வடிவங்கள் தாங்கி யாவ ரையும் மகிழ்விக்கின்றான்.

---

பரந்து விளங்கும் பலசமயக் கொள்கை,
நிரந்து நினைந்தெனறும், நீயறிதி மெய்ம்மையையே.

உலகில் சுவையுள்ள பொருள்கள் பலவுள்ளன. அப் பல்வகைப் பொருள்களினும் விஞ்சிய சுவையுடைய ஒரு பொருள்தான் மிக்க சுவையுடைப் பொருளுக்கு எடுத்துக் காட்டாகக் கூறப்படுகின்றது. உபமானம் உபமேயத்தினும் சிறந்த பொருளாகவே இருக்கவேண்டும் என்பது நியதியல்லவா? விஞ்சியதொன்றை உபமானமாகக் கூறினால்தான், உபமேயம் சிறப்பினைப் பெறும். அப்பொழுதுதான் அப்பொருளினிடத்து விழைவுண்டாகும்.

'தேன் இனிமை' என்ற சொற்றொடரைக் கேட்கின்றோம் அல்லவா? தேன் இனிமையானது என்பது யாவராலும் ஒப்புக் கொள்ளப்பட்டதேயாகும். இனிமைக்குத் தேனைத்தான் உவமை கூறுதல் மரபு. தேனினிமை என்ற சொற்றொடரே இனிமையாக வுள்ளதன்றோ? தேன் இனிப்பானது; நெகிழ்ச்சியுடையது; மணமுடையது. தேன் தோன்றுமிடம் எது? மணமிக்க மென்மையான மலரினிடத்தன்றோ நறுந்தேன் கிடைக்கின்றது. அது யாராலும் தோற்றுவிக்கப்படவில்லை. அது மலரிடத்துத் தானே தோன்றுகிறது. அது 'மது' என்ற பெயரையும் உடையது. அதன் இனிப்பை மதுரம் என்பர். அத்தேனை மதுகரம் சேர்த்துத் திரட்டி யளிக்கின்றது. பனி மலரில் துளித் துளியாக அமைந்து இனிமை தரும் தேன் உடலுக்கு உரமளிக்க வல்லது; பிணிநீக்க வல்லது; இன்பமும் சுவையும் தரவல்லது. அத் தேன் 'நா' என்ற உறுப்பிற்குச் சுவையூட்டவல்லது. இறைவனைப்பற்றிக் கூறும் பெரியார்களும் 'இன்னதென றறியாத தேன்' என்று கூறுகின்றனர்.

(அடுத்த இதழில் முடியும்)

---

காமாலைக் கண்ணர்க்குக் கண்டதெலாம் மஞ்சள்நிறம்
தாமாத் திருந்தார், தக்கோரை என்னுநரே.

# THE UNIVERSAL BANKER

In the Bank of the Universe, the Jeevas are the Customers. Lord Sri Krishna - The God Universal is the one Proprietor without a second. He is the sole Director and Manager. Those that give and those that take are but passing cheques in favour of each other. There are others who draw upon the deposits left with the Bank in varied accounts in the countless lives left behind, yet there are others who had opened overdrafts and have been drawing thereout without any credit in their favour The indebtedness due to an ordinary bank may or may not be discharged, but the debts due to the Bank Universal would have to be discharged, if not now, in due futurity, with mounting interest. The story of human transactions represent ultimately the activities of the customers in the Bank Universal.

No gift or transfer is ever complete unless the Bank honours the cheque. The purpose of every trsnsaction between man and man depends for its fulfilment on the Grace of the Divine will. The march of a glorious career from poverty to power might have been spoiled by the unseasonable riches at the start or even if it should clog the royal road of

industry and achievement. The Lord knows and only He knows where riches are safe for man; for, if poverty be a blight, riches may easily become a sore disease. Hence beware that gifts and transfers are best made in the thought of God and with an invocation for His grace.

This remarkable principle is well illustrated in the rituals of ancestral worship prevailing amongst Hindus. The New moon ceremony, and the annual ceremonies in which oblations of water and food are reverently given in the name of God to the ancestors of three degrees provide fruitful thought for meditation. The oblation of food is thrown into the sacred fire and the sacred fire represents the One God that permeates the cosmos. He is the Lord Krishna of Ritual Science, the Proprietor of the Bank Universal.

If the parents have transmigrated into other bodies living and unburn yet, the worshipful offering of gratitude of the Hindu is deposited with the sacred fire to the credit of the souls to whom he owes all that counts, for joy in the present life. As the Banker receives in the common till all the monies deposited by the customers, so the Universal Banker in

the shape of sacred fire receives what the Jeevas would fain transfer to the departed souls of their a ncestors. Even as the Banker delivers to the payee the amounts standing to their credits from out of the common till, even so the Universal Banker distributes and effectuates the gifts and the gifts and transfers from the dead to the living and from the living to the dead. It is needless to say if this were possible that the banker can effectuate transfers from the dead to the living and from living to the living. The Divine Banker blesses and adjusts the accounts of each, and happy are His customers who open accounts of credit, with Him. But happier still is he who becomes one with Him, for then he may not own limited pages of accounts with the Divine, for becoming one with Him, he loses limited wealth of his deposit account. But all becomes His instead. Jeevas may start as customers, but the greatness of those that become with God equal partners and proprietors of the Bank Universal, lies beyond words.

Om Tat Sat

(3-5) *Thiruppugal Mani*

கண்ணப்பன் ஒப்பதோர் அன்பின்மை கண்டபின்
என் அப்பன் ஒப்பில் என்னையும் ஆட்கொண்டருளி
வண்ணப் பணித்தென்னை வாஎன்று அழைத்த வான்கருணை
சுண்ணப் பொன்நீற்றற்கே சென்றூதாய் கோத்தும்பீ !

(மாணிக்கவாசகர்)

No 1506
ASOKA

Regd. No. M. 5390 Amirthavachani (1961 ஆவணி அமிர்தவசனி 13-5.


# Coffee

**Ours for Quality**

RAW ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS) LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

## சுவர்ண மாளிகை

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூலவீதி :: மதுரை

Tel: "FAITH" Estd: 1924. Phone: 113




## குடை மார்க் பினாயில்

(சிறந்த கிருமி நாசினி)

தயாரிப்பாளர்:

ஸ்பிரிட் வேர் ஹவுஸ்

49, சைடன் ஹாம் ரோடு

சென்னை-3. டெலிபோன்: 2510

விநியோகஸ்தர்கள்:

கார் & கம்பெனி

129, மூர் தெரு

சென்னை-1. டெலிபோன்: 2058


**அமிர்தவசனி சந்தாதாரர்கட்கு வேண்டுகோள்:**

பங்குனி மாதத்துடன் உங்கள் வருட சந்தா முடிவடைந்தபடியால், தயை கூர்ந்து பிலவ வருஷ சந்தாத் தொகையை அனுப்பும்படி ஞாபகப் படுத்துகிறோம் வி. பி. யில் அனுப்ப இயலவில்லை.

அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1.

Printed by V. Thirunavukarasu at the Rathnam Press (Branch)
65, Tirupalli Street, Madras-1.